வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வீர மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 328 | பக்கங்கள் : 16

# தமிழ் மக்கள் மாவீரர்களை நினைவேந்த தடையில்லை!



## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், நவம்பர் 24

**"தமிழ் மக்கள் மாவீரர் வாரத்தை அனுஷ்டிப்பதற்கு எந்த வித தடையும் கிடையாது. அவர்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தமுடியும். நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்பவர்களை ஒளிப்படம் எடுக்கவேண்டாம் என பாதுகாப்புத் தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது."**

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசின் கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்.

சகோதர ஊடகமான டான் தொலைக்காட்சியின் ஸ்பொட்லைட் அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

மாவீரர் தினத்தை தமிழ் மக்கள் இம்முறை எந்தவிதமான கெடுபிடிகளும் 15



படம் : ஐ. சிவசாந்தன்

## நல்லூரில் மாவீரர் கல்வெட்டு திறப்பு!

யாழ்ப்பாணம், நவ. 24

நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக உள்ள பகுதிகளில் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மக்கள் அஞ்ச லிக்காக அங்குரார்ப்பணம் செய்து 15

## அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தல்

### அமைச்சர் விஜித ஹேரத் தகவல்

கொழும்பு, நவ. 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை விரைவில் நடத்த 15

## நாணய நிதியத்தினால் இலங்கைக்கு 4 ஆம் கட்டமாக 254 மில்லியன் ரூபா!

கொழும்பு, நவ. 24

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டம் குறித்த மூன்றாம் கட்ட மீளாய்வு தொடர்பில் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இதற்கு சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபை அனுமதி அளித்ததன் பின்னர், இலங்கைக்கு 4ஆம் கட்டமாக 254 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்படும் எனவும் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான மூன்றாம் கட்ட மீளாய்வு கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. மூன்றாம் கட்ட மீளாய்வுக்கான பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெறுவதற்கு 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் விரிவாக்கப்பட்ட நிதி வசதி செயற்றிட்டத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைவது 15

## இனியாவது ஒன்றுபடுவோம்!

### அடைக்கலநாதன் கோரிக்கை



வவுனியா, நவ. 24

நாங்கள் ஒன்றிணைந்தால் மக்கள் எங்களோடு நிற்பார்கள் என்பதை தேர்தல்மூலம் சொல்லியிருக்கிறார்கள். எனவே இனியாவது ஒன்றுபட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 15

## யாழில் பெண் சட்டத்தரணி வீட்டில் கோடிக்கணக்கான பணம் திருட்டு!

### பணிப்பெண் உள்ளிட்ட இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 24

நல்லூர் பகுதியில் சட்டத்தரணியொருவரின் வீட்டில் ஒரு கோடி 40 இலட்சம் ரூபாய் பெறுமதி யான நகை மற்றும் பணம் பொருட்களை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெண் சட்டத்தரணி ஒருவர் வீட்டில் இல்லாத சமயத்தில் 40 பவுண் நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன களவாடப்பட்டன.

குறித்த சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில், 15

## வடக்கு-கிழக்கில் முதலீடு செய்ய விரும்புகிறது சீனா

### பச்சைக்கொடி காட்ட தயாராகிறதா அரசு?

கொழும்பு, நவ. 24

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி சீனா அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன், அதற்கான முதல்படியாகவே இங்குள்ள விவசாயிகள், மீனவர்கள் மற்றும் வறுமையானவர்களுக்கான உதவிகளை இலங்கைக்கான சீனத் தூதகரம் செய்து வருவதாக இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 15

## நானும் மோடியும் கையெழுத்திட்ட ஆவணத்தை நடைமுறைப்படுத்துக!

### அநுர அரசிடம் ரணில் கோரிக்கை

புதுடில்லி, நவ. 24

இந்தியாவும் இலங்கையும் கடந்த வருடம் கைச்சாத்திட்ட ஆவணத்தை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நடைமுறைப்படுத்தவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க பி.ரி.ஐக்கு கருத்து தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்டார்.

நானும் பிரதமர் மோடியும் கைச்சாத்திட்ட தொலைநோக்கு ஆவணத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் எந்தெந்த துறைகளில் ஒத்துழைப்பை முன்னெடுக்க வேண்டும் என்பது குறித்து 15

## அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக சி.ஐ.டியில் மற்றொரு முறைப்பாடு!

கொழும்பு, நவ. 24

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் பொலிஸ் தலைமையகத்தில் நேற்றும் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

10ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வின் போது பாராளுமன்ற மரபுகளுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமர்ந்திருந்த சம்பவம் சமூகத்தில் பலராலும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கன்னி அமர்வின் பின்னர் அவர் 15

## நெல் பதுக்கப்பட்டிருப்பதாலேயே சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு

### அரசாங்கம் கடும் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லை பதுக்கி வைத்திருக்கின்றமையாலேயே சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. என்றாலும், நுகர்வோருக்கும், விசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அரிசியை இறக்குமதி செய்து சந்தையில் தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படும் என விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

சந்தையில் பாரிய அளவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாடு, வெள்ளை, சிவப்பு 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உயிரை பாதுகாக்க இடமாற்றம் செய்யுங்கள்

## மன்னார் மருத்துவமனை அத்தியட்சகர் கோரிக்கை

மன்னார், நவ. 24

**எனது உயிரை பாதுகாக்க வடக்கு மாகாணத்திலிருந்து உடனடியாக இடமாற்றம் செய்யுங்கள் எனக் கோரி மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் அத்தியட்சகர், மருத்துவர் ஆசாத் எம். ஹனிபா, மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில்,

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு அத்தியட்சகராக நான் நியமிக்கப்பட்டதில் இருந்து பல சுகாதார தர மேம்பாடுகள் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் மூலம் சுகாதார சேவைகளை மேம்படுத்த என்னை அர்ப்பணித்து வந்துள்ளேன்.

எனினும், கடந்த 19 ஆம் திகதி மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் துரதிர்ஷ்டவசமான கரு மகப்பேறு மரணம் நிகழ்ந்தது.

குறித்த தாய் மற்றும் சிசுவின் மரணம் தொடர்பாக உரிய நடவடிக்கையை முன்னெடுத்து வந்தேன். எனினும், மகப்பேற்று விடுதியில் புகுந்த கும்பல் பிரசவ அறைக்குள் நுழைந்து மருத்துவமனையின் சொத்துகளை சேதப்படுத்தியது.

நான் அங்கு சென்ற போது நிலைமை குறித்து விவாதிக்கவும், வருகை தந்த கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் பொலிஸாரின் உதவியை நாடினேன்.

எனினும் அவர்கள் என்னை தனிப்பட்ட முறையில் குறி வைத்து சரமாரியாக தாக்க முயன்றனர். அவர்கள் என்னை கொலையாளி என்று கூறி கூச்சலிட்டனர். அவர்களில் சிலர் என்னைத் தாக்க முயன்றனர்.

அதனைத் தொடர்ந்து 20 ஆம் திகதி புதன்கிழமை அன்று மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மத்திய சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களுடன் மேற்கண்ட மரணம் தொடர்பாக சுகாதார அமைச்சகம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தோம்.

இதற்கிடையில் அன்றைய தினம் மாலை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் நுழைவாயிலை முற்றுகையிட்டு ஒரு பெரிய கூட்டம் அங்கு அவசர சிகிச்சை பிரிவு மற்றும் வெளி நோயாளர் பிராவுக்குள் நுழைந்து அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் மாவட்ட செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் என்னை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.


நான் எனது குடியிருப்பில் இருந்து 355 கிலோ மீற்றர் தொலைவில் இருந்து பயணிப்பதால் இது எனக்கு கடுமையான உயிருக்கு ஆபத்தான எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எனக்கு எதிராக தனிப்பட்ட முறையில் சமூக ஊடகங்களில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் எனக்கு எதிரான பிரசாரங்கள் பொது கிளர்ச்சி மற்றும் அமைதியின்மையை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, எனக்கு வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பற்ற பணிச் சூழல் ஏற்பட்டுள்ளது.

எனது பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தயவு செய்து என்னை அவசரமாக வடக்கு மாகாணத்துக்கு வெளியே இடமாற்ற நடவடிக்கை எடுக்கவும்.

எனக்கு எதிராக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன் என அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)



## நல்லூரில் உயிருடன் பிடிபட்ட முதலை

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் மூத்தவிநாயகர் கோவில் பகுதியில் வீதிக்கு வந்த முதலையொன்று நேற்றுக்காலை உயிருடன் பிடிபட்டது.

வீதியோரமாக முதலை இருப்பதாக பொதுமக்கள் தகவலளித்த நிலையில் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட் டது.

யாழ். மாவட்டத்தில் நிலவி வரும் மழையுடனான வெள்ளப்பெருக்கு காரணமாக அருகில் உள்ள குளத்தில் இருந்த முதலை வீதிக்கு வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ)

## சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை அதிபர் இராமசாமி சிறீதரன் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி, சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல் நம்பி கலந்து

சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்வி அதிகாரி சூ. நோபேட் உதயகுமாரும், கௌரவ விருந்தினர்களாக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலத்தின் ஓய்வுநிலை உப அதிபர் க.ஜெகதீஸ்வரன், ஆசிரியர்களான வே.சிவானந்தம், திருமதி றி. இராஜ்குமார், திருமதி கோ.தேவநாதன், திருமதி சி.தர்மராசா, யசோதினி அருணகிரிநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 96ஆவது அகவையை எட்டியிருக்கும் வேளையில் பிரகாசம் இதழ் 3 நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (எ)



பதுளையில் விபத்தில் சிக்கிய

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் சிந்துஜன் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 24

களப்பயிற்சிக்காகச் சென்ற போது பேருந்து தடம்புரண்டதனால் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் 23 நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த கைலைநாதன் சிந்துஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த முதலாம் திகதி கொழும்பிலிருந்து பதுளைக்கு களப்பயிற்சிக்காகச் சென்று கொண்டிருந்த வேளை பதுளை - மகியங்கனை வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து தடம்புரண்டதனால் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் நால்வர் உயிரிழந்தனர்.

பேருந்தில் சென்ற சாரதி உட்பட 36 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பதுளை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அவர்களில் படுகாயமடைந்திருந்த 6 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மாணவன் சிந்துஜன் கடந்த வாரம் இரத்மலானையில் அமைந்துள்ள பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில், நேற்று அதிகாலை 5: 30 மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (எ)

# மாவீரர் துயிலும் இல்லங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்

## ஜனநாயக போராளிகள் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டை ஐக்கியப்படுத்தப் போவதாக தெரிவித்து பதவிக்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, நல்லிணக்கத்தின் முதல் படியாக மாவீரர் நாள் நினைவேந்தலை சுதந்திரமாக மேற்கொள்ள ஏதுவாக மாவீரர் துயிலும் இல்லங்களிலிருந்து இராணுவத்தை வெளியேறி உறவுகள் நினைவுகூர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. வேந்தன் தெரிவித்துள்ளார்.




பருத்தித்துறையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போவதாக ஜனாதிபதி அநுரகுமார உறுதியாக கூறினார். நல்லிணக்கத்தின் முதலாவது நிகழ்வாக மாவீரர் நாள் நினைவேந்தலை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதியளிக்க வேண்டும். மாவீரர் துயிலும் இல்ல காணிகளிலிருந்தும் இராணுவத்தை வெளியேற்ற விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். (எ- 05)

## மாவீரர் நாளை முன்னிட்டு யாழில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு இளைஞர்களால் இரத்ததான முகாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 09 மணியிலிருந்து பிற்பகல் 03 மணிவரை இந்த இரத்ததான முகாம் மருதங்கேணி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-05)

## மானிப்பாயில் தேநீர் அருந்திய குடும்பஸ்தர் திடீரென மரணம்


யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் வீட்டில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் திடீரென உயிரிழந்தார். மானிப்பாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த உதயகுமார் சஜிந்தன் (வயது - 32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

குறித்த குடும்பஸ்தர் தனது வீட்டில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த வேளை திடீரென மயக்கமுற்றார். இந்த நிலையில் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர்களின் பெயர், விவரங்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நல்லூரில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# புயல் தொடர்பான அறிவிப்பை சாதாரணமாக கருதவேண்டாம்

## பிரதீபராஜா வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 24

**"வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்று சுழற்சி காற்றமுத்த தாழ்வு நிலையாக உருவாகும். இது இன்று தீவிர காற்றமுத்த தாழ்வு நிலையாக மாறி, பின்னர் நாளை 25 ஆம் திகதி காற்ற முத்த தாழ்வு மண்டலமாக மாற்றம் பெறும். இது நாளை மறுதினம் 26ஆம் திகதி புயலாக (மிதமான வலுக்கொண்ட புயலாக) மாற்றம டையும். இப்புயல் தொடர்பான முன்னறிவிப்பை சாதாரணமாக கருத வேண்டாம்"**

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான நாக முத்து பிரதீபராஜா தெரிவித் தார்.

இந்தப் புயல் மேற்கு - வட மேற்கு திசையில் நகரும் வாய்ப் புள்ளது. இது கரையைக் கடக் கும் இடம் தற்போது வரை மிகச் சரியாக கணிக்க முடிய வில்லை. நாளை மறுதினம் 26 ஆம் திகதிக்குப் பின்னரே கணிக்கலாம். தற்போதைய நிலையின் படி இந்தியாவின் தமிழ்நாட்டின் புதுச்சேரி - கட லூருக்கு அண்மித்ததாக கரை யைக் கடக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இந்த புயல் நாளை 25ஆம் திகதி இரவு அல்லது 26ஆம் திகதி கிழக்கு கடற்பகுதிக்கு (அம்பாறைக்கு அண்மித்து) பின்னர் வடக்கு நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது மிதமான வலுவுள்ள புயலாக கருதப்பட்டாலும் அதிக மழைவீழ்ச்சியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. அதனால் தற்போது கிடைக்கும் மழை இன்று 24 முதல் தீவிரமடையும். குறிப் பாக நாளை 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களின் பல பகுதிகளுக்கும் மிகக் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. முன்னரே குறிப் பிட்டபடி நாளை மறுதினம் 26ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான 48 மணி நேரத் தில் 350 மில்லி மீற்றரை விட உயர்வான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நாளை 25 ஆம் திகதி முதல் கடற்பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்கும். 26, 27 மற் றும் 28ஆம் திகதிகளில் காற்றின் வேகம் கடற்பகுதிக ளில் 70 கிலோ மீற்றரை விட உயர்வாக இருக்கும். கரையோ ரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை வீசக் கூடும். உள் நிலப்பகுதிகளில் காற்றின் வேகம் 50 கிலோ மீற்றரை விட உயர்வாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு, தென் கிழக்கு மற்றும் தெற்கு கடற்பகு திகள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பத னால் மீனவர்கள் எக்காரணம் கொண்டும் கடலுக்கு செல்ல வேண்டாம். மேற் குறிப்பிட்ட கடற் பகுதிகளில் பல நாட் கலங்களில் ஆழ் கடல் மீன்பிடி யில் ஈடுபடுவோர் உடனடியாக கரை திரும்புவது அவசியம்.

பொதுவாக சாதாரண சந்தர்ப்பங்களில் அதிக கன மழை கிடைத்தாலும் அது அதிக பாதிப்புகளை ஏற்படுத்தாது. ஆனால், புயல் போன்ற அசாதா ரண வானிலை நிலைமைகளில் கிடைக்கும் கன மழை வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தும். ஏனெனில்

1. கரையோரப் பகுதிகளில் புயல் காற்று காரணமாக உயர் வான அலைகளின் விளைவால் நிலப்பகுதிகளுக்குள் கடல் நீர் உட்புகும்.

2. புயலின் காரணமாக கடல் நீர் மட்டம் உயர்வாக இருப்பதனால் நிலப் பகுதிக ளில் கிடைக்கும் மழை நீர் வடிந்து கடலை சென்றடை யாது.

3. வேகமான காற்றோடு கூடிய மழை என்பதனால் மழை யின் பாதிப்பு உயர்வாக இருக் கும்.

4. நிலம் ஏலவே நிரம்பியுள் ளமையால் மேலதிகமாக கிடைக்கும் ஒவ்வொரு 10. மிலோ மீற்றரும் நிலத்தின் மேலேயே தேங்கி நிற்கும்.

மேற் குறிப்பிட்ட காரணி கள் காரணமாக எதிர்வு கூறப் பட்டுள்ள புயலினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளின் தாழ் நிலப்பகுதிகள் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டுள்ளன.

இந்த புயல் தொடர்பான முன்னறிவிப்பினை சாதாரண மாக கருத வேண்டாம்.

இந்த நிமிடம் வரை சகல மாதிரிகளும்(கிட்டத்தட்ட 19 மாதிரிகள்) இந்த புயல் எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் கடுமையான மழை வீழ்ச்சியையும், வேகமான காற் றையும், அதீத கடற் கொந்தளிப் பையும் ஏற்படுத்தும் என்றே வெளிப்படுத்துகின்றன.

ஆகவே ஒரு புயலை எதிர் கொள்ள நாம் தயாராக வேண் டும். ஒரு அனர்த்தத்துக்காக எம்மை தயார்ப்படுத்தி அந்த அனர்த்தம் நிகழாது விட்டால், அதனால் எமக்கு எந்த விதமான பாதிப்பும் கிடையாது. ஆனால், நாம் தயாராக இல்லாமல் அனர்த்தம் ஒன்று நிகழ்ந்தால் அதன் பாதிப்புக்கள் மோசமான தாக இருக்கும். ஆகவே எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வோம்.

வடக்கு ,கிழக்கு தென் மாகா ணங்களின் நிர்வாக அதிகாரி கள் இது தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல் அவசியம்.

எதிர்வரும் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் அதிக உய ரம் கொண்ட கடலலைகள் காரணமாக கடல்நீர் குடியிருப் புக்களுக்குள் உள்வருகை தொடர்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை, அம்பாந் தோட்டை மற்றும் காலி மாவட்ட கரையோர மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

கனமழை காரணமான வெள்ள அனர்த்தம் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப் பது அவசியம் என்ற விட யத்தை அனைத்து மக்களுக்கும் அறிவித்தல் வேண்டும். குறிப் பாக 26 மற்றும் 27ஆம் திகதி களில் அதிக விழிப்போடு இருத் தல் அவசியம்.

மிக வேகமான காற்றினால் பாதிக்கக்கூடிய மரங்கள், கட்ட டங்கள் என்பன போன்ற விட யங்களில் கவனம் செலுத்துதல் அவசியம் என்று குறிப்பிட்டுள் ளார். (எ)

# சட்டங்களை மீறாது மாவீரர் நாள் நிகழ்வு

## சம்பூர் பொலிஸார் ஆலோசனை

திருகோணமலை, நவ. 24

நாட்டின் சட்டங்களை மீறாத வகையில் சம்பூர் - ஆலங் குளம் மாவீரர் துயிலும் இல்லத் தில் நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுக்குமாறு பொலிஸ ார் ஆலோசனை வழங்கியுள்ள தாக சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் க. பண்பரசன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த வருடம் சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வை செய்வதற்கு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தால் விதிக் கப்பட்ட தடை உத்தரவால் நினைவேந்தல் செய்ய முடியா மல் போனது.

இம்முறை பயங்கரவாத தடைச்சட்டத்தை மீறாத வகையில் நினைவேந்தல் செய் வதற்கான ஆலோசனைகளை சம்பூர் பொலிஸார் வழங்கி யுள்ளதாகவும், பொலிஸாரின் ஆலோசனைக்கு அமைவாக பொலிஸார் உட்பட முப்படை யினரின் கடமைகளுக்கு குந்த கம் விளைவிக்காத வகையிலும் மாவீரர் நாள் நினைவேந்தலுக் கான ஆரம்ப கட்ட செயல்பாடு களை முன்னெடுத்து வருவதா கவும் தெரிவித்தார்.

அத்துடன் இது ஜனநாயக நாடாகும். இந்த நாட்டில் இறந்தவர்களை நினைவுகூருவ தற்கு அனைவருக்கும் உரிமை யுண்டு. இந்த விடயம் அரச மைப்பிலும் குறிப்பிடப்பட்டுள் ளது- என்றார். (எ)

# நினைவுகூரலும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 24

இலங்கை முற்போக்கு இடதுசாரி இயக்கத்தின் முன் னோடிகளில் ஒருவரான கே. ஏ. சுப்பிரமணியத்தின் 35 ஆவது ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3. 30 மணியள வில் சுழிபுரத்தில் இயங்கி வரும் கே. ஏ. எஸ். சத்தியமனை நுல கத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித் துறை தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் கந்தையாவுடன் மாத் தறை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரே மலால் குமாரசிறியும் நினைவு கூரப்படவுள்ளதுடன், கே. ஏ. சுப்பிரமணியத்தால் எழுதப் பட்ட தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.(எ)

# பண்டிகை காலத்தையொட்டி நாட்டில் விசேட சோதனைகள்

கொழும்பு, நவ. 24

எதிர்வரும் பண்டிகை காலத்தை இலக்காகக் கொண்டு நாடளா விய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் மற் றும் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரி வித்துள்ளது.

தற்போதைய சுற்றிவளைப்பு களுக்காக, மேலதிகமாக விசேட அதிரடிப் படையினர் நியமிக்கப்பட்டுள்ளதாக குறித்த சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை இந்தச் சோதனைகள் தொடரும் எனவும், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை காட்சிப்படுத்துவதில் விசேட அவதானத்துடன் சோதனை களை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் ஏற்படும் பிரச்னைகள் தொடர் பில் வாடிக்கையாளர்கள் 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவிக்க முடியும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள் ளது. (எ)

# எம். பிக்களுக்கு இனிமேல் கைத்துப்பாக்கி இல்லை

## குறைகிறது சிறப்புரிமைகள்

கொழும்பு, நவ. 24

பாராளுமன்ற உறுப்பினர் கள் அனுபவித்து வந்த சில சலுகைகள் குறைக்கப்பட்டுள்ள தாக பாராளுமன்ற வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக் காக இதுவரை கலமும் கைத் துப்பாக்கி வழங்கப்பட்டு வந்த நிலையில், அந்த வசதியை நீக்கு வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

[illegible] வொரு பாராளுமன்ற உறுப்பின ருக்கும் இரண்டு பொலிஸ் உத்தி யோகத்தர்களின் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதுடன் இது வும் பெருமளவில் நீக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை யில் வழங்கப்பட்டு வந்த வரியில்லா வாகன அனுமதிப் பத்திரமும் நீக்கப்படவுள்ளதாக வும் தெரியவருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் காணும் கனவுகள் பொய்யாகிவிடக் கூடாது!

## அரச ஊழியர்களுக்கு ஜனாதிபதி அநுர அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 24

மக்கள் ஆணைக்கும் பொது மக்கள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளை தற்போதைய அரசாங்கம் நிறைவேற்றத் தவறினால் நம்பிக்கையான எதிர்காலம் தொடர்பில் மக்கள் காணும் கனவுகளும் பொய்யாகிவிடும் என்றும், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அரசாங்கத்தை உருவாக்க அரச ஊழியர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார, நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் அமைச்சின் பணிக்குழாம் முன்னிலையில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு நிதியமைச்சின் அதிகாரிகள் வழங்கிய பங்களிப்பை நன்றியுடன் பாராட்டிய ஜனாதிபதி, எதிர்கால இலக்குகளை அடைவதற்கு அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அரசியல் மாற்றங்களின் போது அரச ஊழியர்களை முன்னைய செயல்பாடுகளை கருத்தில் கொண்டு மதிப்பீடு செய்த வரலாறுகள் உண்டு.

ஆனால், இனிவரும் காலங்களில் அரச ஊழியர்கள் ஆற்றப்போகும் பணியே அவர்களை மதிப்பீடு செய்யும் காரணியாக இருக்கும்.

அரச ஊழியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் ஏதேனும் அநீதி அல்லது தவறுகள் இடம்பெற்றால் அவர்களுக்காக முன்னிலையாவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

வருமானம் ஈட்டும் திணைக்களங்கள் தொடர்பில் மக்களிடம் நல்ல விம்பம் இல்லை என்றும், அந்த நிலைப்பாட்டினை மாற்றுவது கடினமானது என்ற போதிலும், தம்மைப் பற்றி ஏதேனும் மோசமான விம்பம் இருக்குமாயின், புதிய அரசாங்கத்தின் கீழ் அந்த அனைத்து அதிகாரிகளும் தம்மைப் பற்றிய விம்பங்களை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்கு முன்பாக அதிகாரிகளை அச்சுறுத்துவது, அவர்களின் கருத்துகளைப் புறக்கணிப்பது போன்ற செயல்பாடுகள் தமது அரசாங்கத்தின் கொள்கையல்ல எனவும், சுய ஒழுக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உருவாக்குவதே புதிய மாற்றத்தின் அணுகுமுறையாக அமையும் எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக ஒன்றுபடுமாறு அனைத்து அரசாங்க அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு திசைமுகப்படுத்தல் செயலமர்வு

கொழும்பு, நவ. 24

பத்தாவது பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நாளை 25, நாளை மறுதினம் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் முற்பகல் 9. 30 மணி முதல் பிற்பகல் 4. 30 மணி வரை பாராளுமன்ற குழு அறை இலக்கம் 01இல் நடத்தப்படவுள்ளது.

புதிய பாராளுமன்றத்தின் ஆரம்பத்தில் சம்பிரதாயபூர்வமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாக இந்த திசைமுகப்படுத்தல் செயலமர்வு இம்முறையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் இந்த செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல, பிரதி சபாநாயகர் மொஹமட் ரிஸ்வி சாலி, குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் நளிந்த ஜயதிஸ்ஸ, பாராளுமன்ற செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மூன்று நாள் செயலமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம், பாராளுமன்ற சிறப்புரிமைகள், பாராளுமன்றத்தின் சட்டவாக்க செயல்பாடுகள், பாராளுமன்ற குழு முறைமை, பாராளுமன்ற நிலையியல் கட்டளைகள், அரசமைப்பின் ஏற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலத்திரனியல் வாக்களிப்பு முறை குறித்த நடைமுறை அமர்வொன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும், பாராளுமன்றத் திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள், அந்தந்தப் பிரிவுகளின் மூலம் பாராளுமன்றச் செயல்பாடுகளில் உறுப்பினர்களின் பங்களிப்புகள் மற்றும் பணிகள் குறித்து உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. (எ)

# 70,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதியாகும்

கொழும்பு, நவ. 24

சந்தையில் நிலவும் அரிசி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் 70, 000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் கே. டி. லால்காந்த தெரிவித்தார்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

விவசாய அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"சந்தையில் நெல் தட்டுப்பாடு நிலவுகிறது. விலை பிரச்னையும் உள்ளது. உற்பத்தியை வைத்து பார்க்கும் போது போதுமான அளவு நாட்டரிசி இருக்க வேண்டும். ஆனால், சந்தைக்கு வரவில்லை. எனவே, கண்டிப்பாக வெளிநாட்டிலிருந்து அரிசியை கொண்டு வருவோம். இந்தியாவில் இருந்து கொண்டு வரப்படும். இது தொடர்பில் இரு அமைச்சுக்களின் கூட்டு அமைச்சரவை பத்திரத்தை முன்வைக்கவுள்ளோம். இதனால் யாருக்கும் பிரச்னை இருக்காது. நாங்கள் பிரச்னையை தீர்ப்போம். இடைத்தரகர்களுக்கு ஏமாற்ற அனுமதிக்க மாட்டோம்.

பெரும் அரிசி ஆலை உரிமையாளர்களால் எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. ஆனால், சந்தையில் தட்டுப்பாடு இருந்தாலும் உற்பத்தி வந்துவிட்டது என்றால், அவர்களிடம்தான் அது இருக்க வேண்டும். எனவே, கண்டிப்பாக நுகர்வோர் மற்றும் விவசாயிகள் பற்றி சிந்தித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். பண்டிகை காலங்களில் கண்டிப்பாக தட்டுப்பாடு இருக்காது" - என்றார். (எ)

# வீட்டுப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும்!

## பிரதி அமைச்சர் சரத்

கொழும்பு, நவ. 24

பல்வேறு அரசாங்கங்களின் கீழ் வீட்டுப் பிரச்னைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை உரிய தீர்வு காணப்படவில்லை என்று நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் டி. பி. சரத் தெரிவித்தார்.

வீட்டு நிர்மாணத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்னைகளுக்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் இணைந்து தீர்வுகள் காணப்படும் என்றும் அவர் கூறினார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர்

பத்தரமுல்லையிலுள்ள பிரதியமைச்சரின் அலுவலகத்தில் தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அநுர கருணாதிலக, அந்த அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ)

# முதியோர் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும்

கொழும்பு, நவ. 24

அஸ்வெசும பயனாளிகள் குடும்பங்களில் வசிக்கும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்காக அரசாங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்படும் 3,000 ரூபாய் கொடுப்பனவு வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

நவம்பர் மாதத்துடன் தொடர்புடைய பணம் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், வங்கிக் கணக்கிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் கீழ் 5,11,086 பேருக்கு இந்தக் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற நிலையில், இம்மாதத்துக்காக 1,533,258,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (எ)

# விபத்தில் சிக்கிய சகோதரர்கள் பலி

குருநாகல், நவ. 24

கட்டுப்பாட்டை இழந்த ஜீப் ரக வாகனம் வீதியோரம் இருந்த நீரோடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சகோதரர்கள் இருவர் உயிரிழந்தனர்.

குளியாப்பிட்டி, ஹெட்டிபொல வீதியில் கம்புராபொல பாலத்துக்கு அருகில் குளியாப்பிட்டிலிருந்து ஹெட்டிபொல நோக்கிச் சென்ற ஜீப் ரக வாகனம் புல்கமுவ ஓயாவில் பாய்ந்ததில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரேன் உதவியுடன் ஆற்றில் வீழ்ந்த ஜீப் வாகனத்தை மேலே இழுத்ததில் வாகனத்தில் சிக்கிய இருவர் குளியாப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

உயிரிழந்தவர்கள் 25 மற்றும் 27 வயதுடைய குருநாகல் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், இருவரும் சகோதரர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

விபத்து இடம்பெற்ற இடம் வளைவுகள் நிறைந்த இடம் எனவும், வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரத்திலுள்ள ஓடையில் விழுந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# அஸ்வெசும விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம்

கொழும்பு, நவ. 24

அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக மேலதிக கால அவகாசத்தை வழங்குவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் நாளை முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அஸ்வெசும நலன்புரி திட்டப் பயனாளர்களுக்கான குறைகளைச் சமர்ப்பிப்பதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

நாளை முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை குறைபாடுகளைத் தெரிவிக்க முடியும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இளைஞனின் தலையை துண்டித்து படுகொலை!

## பெண் உட்பட இருவர் கைது

பதுளை, நவ. 24

பதுளை கொஸ்லந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹாமுதுருகந்த பகுதியில் இளைஞன் ஒருவர் தலை துண்டித்து படுகொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த 18ஆம் திகதி முதல் காணாமல் போனதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்தது.

இதன்படி நடத்தப்பட்ட விசாரணையில், காணாமல் போன நபர் கொலை செய்யப்பட்டதாகவும், அவர் நபர் ஒருவருடன் ஹாமுதுருகந்த பகுதிக்கு சென்றதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்தது.

விசாரணைகளை தொடர்ந்த பொலிஸார், காணாமல் போன நபருடன் சென்றதாகக் கூறப்படும் பலஹருவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரைக் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், காணாமல் போனவரின் கழுத்தை அறுத்து கொலை செய்து, தலையை புதைத்தது தெரியவந்தது.

இதன்படி, உயிரிழந்தவரின் உடல் பாகங்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

உயிரிழந்தவர் ஹரபெகம, தனமல்வில பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவராவார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் சந்தேக நபருக்கும் ஊவ குடோஓய பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருடன் தகாத உறவு இருந்ததுடன், அவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே கொலை நிகழ்ந்ததாக விசாரணையில் தெரியவந்தது.

இக்கொலை தொடர்பில் ஊவ குடோஓய பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.11.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், கார்த்திகை 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## தமிழ்த் தேசிய கட்சிகளின் பின்னடைவு?

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சி எட்டு ஆசனங்களை கைப்பற்றியிருந்தது. இதனால், தாங்களே தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரேயொரு கட்சி என்று அவர்களால் சொல்ல முடியும். ஆனால் இதனை அவர்கள் ஒரு வெற்றியாகக் கூறிக் கொள்ள முடியுமா? 2010இல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எத்தனை ஆசனங்கள் இருந்தன - அவை ஏன் தொடர்ந்தும் குறைந்து கொண்டே செல்கின்றன?

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஒப்பீட்டடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சி வெற்றிபெற்றதாக கூறிக்கொண்டாலும் கூட, தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்தல் என்னும் நிலையில் கட்சி தோல்வியுற்றிருக்கின்றது. குறிப்பாக வடக்கில் தேசிய மக்கள் சக்தியின் அலைக்குள் தமிழ் மக்கள் அள்ளுண்டு போயிருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் அலைக்கு முன்னால் தமிழ்த் தேசியத்தால் ஈடுகொடுக்க முடியவில்லை என்றால், தமிழ்த் தேசிய நிலையில் வடக்கு மிகவும் மோசமான நிலையில்தானே இருக்கின்றது. இது வெறுமனே, வடக்கு மைய தமிழ்த் தேசியர்களின் தோல்வி மட்டமல்ல, அதன் மீது செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருப்பதாக நம்பிக் கொண்டிருக்கும் புலம்பெயர் அமைப்புக்களின் தோல்வியும்தான். தேசிய மக்கள் சக்தியின் முன்னால் தமிழ்த் தேசியர்கள் அனைவருமே தோல்வியுற்றிருக்கின்றனர்.

அடுத்ததாக தங்களை ஐந்து கட்சிகளின் கூட்டணியாக முன்னிறுத்தியிருந்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றது. ஐந்து கட்சிகள் - அதிலும் கட்சிகளின் தலைவர்களும் போட்டியிட்ட போதிலும் கூட, அனைவருமாக வடக்கில், ஓர் ஆசனத்தைக் கூட பெற முடியவில்லை என்றால் அவர்கள் தங்களை தொடர்ந்தும் ஒரு கூட்டணி என்று சொல்லிக்கொள்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

கட்சிகள் பிரிந்து கேட்டதால்தான் இவ்வாறானதொரு பின்னடைவு ஏற்பட்டது என்று வழமைபோல் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை - கட்சிகள் ஒன்றுபடாது - ஒன்றுபட அதிக வாய்ப்பில்லை என்னும் போது, அதனை முன்வைத்து தப்பிப் பிழைக்கும் வாதங்களை புரிய முற்படுவது தவறானது. அடிப்படையான விடயம் ஒன்றுதான் - அதாவது, புதிய அரசியல் சூழலை புரிந்துகொண்டு அதற்கேற்றவாறான அணுகுமுறைகளுக்கு கட்சிகள் தயாரற்ற நிலையில் இருப்பதே அடிப்படையான பிரச்னையாகும். சில கட்சிகள், சில கட்சிகளின் தலைவர்கள் என்போர் முதலில் தங்களின் தகுதிநிலையை ஆராய வேண்டும். தாங்கள் தொடர்ந்தும் தேர்தல் அரசியலில் இருப்பது அரசியல் நியாயமுடையதா என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். இதுதான் முதலில் செய்யப்பட வேண்டியது.

ஜனநாயக அரசியலில் மக்கள் பிரதிநிதித்துவம்தான் அடிப்படையானது. அதனை இழந்துவிட்டால் அதன் பின்னர் என்ன நியாயத்தையும் கூறியும் பயனில்லை. தற்போதைய நிலையில் தமிழரசு கட்சியே தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது. அவ்வாறு வாதிட்டால், அது ஜனநாயகரீதியில் சரியானதே.

இந்த இடத்தில் அரசியல்வாதிகள் மீது மட்டும் குற்றஞ்சாட்டிவிட்டு, விடயங்களை சாதாரணமாக தாண்டிச் செல்ல முடியாது. ஏனெனில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பை சிதைத்தவர்கள் அரசியல்வாதிகள் அல்லர் மாறாக, தங்களை புத்திஜீவிகள், கருத்துருவாக்கவாதிகள் மற்றும் சிவில் சமூக அமையமாக, அடையாளப்படுத்தியவர்களே அதன் சிதைவில் பெரியளவில் பங்களித்திருந்தனர்.

தற்போதைய சீரழிவுக்கு அனைவருமே பொறுப்பேற்க வேண்டும். ஒரு சில தனிநபர்கள் மீது பழியை போட்டுவிட்டு ஏனையவர்கள் தப்பியோடலாம் என்று நினைத்தால், இந்த நிலைமை மேலும் சீரழிவை நோக்கியே செல்லும்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."
- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)



## நலனோம்பு மன்றம் உருவாக்க ஆலோசனை



*யாழ்ப்பாணம், நவ. 24*

வடக்கு மாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பல லட்சம் டொலர் நாட்டுக்கு வருமானமாக கிடைத்துள்ளது என கூட்டுறவுத் திணைக்களத்தால் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் மீளாய்வுக்கூட்டம் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத்தில் சில கிராமங்கள் அரசியல் ரீதியாகவும் பல்வேறு காரணங்களுக்காகவும் புறக்கணிக்கப்படுகின்றன. அவற்றை அடையாளம் கண்டு முன்னேற்றவேண்டும். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளிட்ட தேவையுடைய மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கும்போது அவர்களுக்கு காணி இல்லை என்பதைக் காரணம் காட்டி வீடுகளை வழங்காமல் விடவேண்டாம். காணிகளை அவர்களுக்கு கண்டறிவதற்குரிய ஒழுங்குகளை நாங்கள் முன்னெடுப்போம். கடந்த காலங்களைப்போன்று பனைசார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். குறிப்பாக சில ஆலயங்களில் பின்பற்றப்படுவதைப் போன்று பனைஓலையிலான அர்ச்சனைப் பெட்டிகளை ஊக்குவிக்கவேண்டும் - என்றார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் ந.திருலிங்கநாதன், வடக்கு மாகாண பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்கள் கள்ளை உற்பத்தி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கும், உற்பத்தி வரியாகவும் அரசாங்கத்துக்கு பல மில்லியன் ரூபாவைச் செலுத்தியுள்ளன. அதேபோன்று 2 தனியார் நிறுவனங்கள், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து போத்தல் கள்ளை கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் ஊடாக பல லட்சம் டொலரை நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளன. கூட்டுறவுத் திணைக்களம் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக சங்கங்களுக்கு 6 சதவீத வட்டிக்கு கடனை வழங்குகின்றன. அதனை அவர்கள் மக்களுக்கு ஆகக்கூடியது 15 சதவீதம் வரைக்கும் வழங்க முடியும். ஆனால் வடக்கில் சில சங்கங்கள் வேறு சமாசங்களிடமிருந்து 15 சதவீத வட்டிக்கு கடனைப் பெற்று அவற்றை மக்களுக்கு 21 சதவீதம் வரைக்கும் வழங்குகின்றன. இது வடக்கு கூட்டுறவுத்துறைக்கு சவாலாக இருக்கின்றது - என்றார்.

இதன்போது வடக்கு ஆளுநர், அவ்வாறான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது எனவும் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

(அ)

## பழைய கல்வித்திட்டங்களை மீளாய்வு செய்யத் தீர்மானம்


*கொழும்பு, நவ. 24*

கல்வித்துறையில் கடந்த 5 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு திட்டங்களை மீளாய்வு செய்ய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய கல்வி நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு கல்வி துறைசார் நிறுவனங்களால் அண்மைக்காலமாக கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த முன்மொழிவுகள் மற்றும் வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்த பின்னர், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க புதிய கல்வி சீர்திருத்த முன்மொழிவு முன்வைக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும் ரூபா 1 கோடியின் மதிப்பு என்ன?

- எம். சடகோபன்

பொருளாதார வாழ்க்கையின் வினோதமான அம்சங் களில் ஒன்று, பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் காலப்போக்கில் அதிகரித்துக் கொண்டே வருவது தான். சில தசாப்தங்களுக்கு முன்பு இருந்த வருமானம் மற்றும் விலைகள் இன்று குறிப்பிடத்தக்க வகையில் வேறு பட்டதாகத் தெரிகிறது. உதாரணமாக, 1970ஆம் ஆண்டு களில் ஒரு சினிமா டிக்கெட்டின் விலை 10ரூபாய்க்கும் குறை வாகத்தான் இருந்தது. ஆனால், அது இன்று நகரங்களில் 1000 ரூபாய்க்கு மேல் உள்ளது. எனவே, பணத்தின் எதிர்கால மதிப்பைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான தேவை கிடைக்கக் கூடிய விநியோகத்தைவிட அதிகமாக இருக்கும்போது பண வீக்கம் ஏற்படுகிறது. நுகர்வோர் பணக்காரர்களாகி, அதிக செலவு செய்யும்போது இது நிகழ்கிறது. அதிகமான மக்கள் அதே பொருள்கள் மற்றும் சேவைகளை வாங்க முடியும் என்பதால், விலைகளும் இயற்கையாகவே உயர்கின்றன.

வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப விநியோகம் இருக்க முடியாது என்பதுதான் இதற்குக் காரணம். அரசுகள் அதிக பணம் அச்சிடுவதும் பணவீக்கத்துக்கு காரணமாக அமைகி றது. இது எதிர்மறையாகத் தோன்றினாலும், அரசு சில சமயங்களில் அதிக வேலைவாய்ப்புகளையும், வளர்ச்சியை யும் உருவாக்கும் நம்பிக்கையில் பொருளாதாரத்தைத் தூண்டு வதற்காக அதிக பணத்தை அச்சிடுகின்றன. இதை உண்மை யான நாணய உருவாக்கம் மூலமாகவோ அல்லது அரசின் கடனை அதிகரிப்பதன் மூலமாகவோ அல்லது வங்கிகள் பெரிய கடன்களை வழங்குவதன் மூலமாகவோ செய்யலாம்.

இருப்பினும், பொருள்கள் மற்றும் சேவைகளில் தொடர்பு டைய அதிகரிப்பு இல்லாமல் அதிகமான பணம் புழக்கத்தில் நுழையும் போது, ஒவ்வொரு தனிப்பட்ட ரூபாய் நோட்டின் மதிப்பும் குறைகிறது. இதன் விளைவாக, அதிக பணம் அதே அளவு பொருள்களை வாங்கமுடியாத நிலை உருவாகி நுகர்வோருக்கு விலைகள் உயர்கின்றன.

ஆண்டுதோறும் 12 சதவீத வருமானத்துடன் மாதம் ரூ.10,000 தொடர்ந்து முதலீடு செய்தால், ரூ.1 கோடியை குவிக்க சுமார் 20 ஆண்டுகள் ஆகும் என நிதிச் சந்தை வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர். இப்போது, பணவீக்கம் காலப்போக்கில் அந்த ரூ.1 கோடியின் மதிப்பை எவ்வாறு சிதைக்கும் என்பதை ஆராய்ந்தால் வியப்பாக இருக்கும். ஒருவர் முதலீடுகள் மூலம் ரூ.1 கோடி குவித்தாலும், அதன்




'வாங்கும் திறனை' பணவீக்கம் குறைத்துவிடும்.

பணவீக்க விகிதம் 6 வீதம் எனக் கருதி, சரிசெய்யப்பட்ட பிறகு ரூ.1 கோடியின் மதிப்பு 20 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.1 கோடியாக இருக்காது. பணவீக்கத்தால் பணத்தின் வாங்கும் திறன் குறைவதால், இன்றைய ரூ.1 கோடி என்பது 20 ஆண்டு களுக்குப் பிறகு சுமார் ரூ.31.18 லட்சமாகத்தான் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. அதாவது, காலப்போக்கில் பணவீக்கம் பணத்தின் மதிப்பைக் குறைத்துக்கொண்டே இருக்கும். 30 ஆண்டுகளுக்குப் பிறகு, மதிப்பு மேலும் குறைந்து சுமார் ரூ.17.41 லட்சமாக இருக்கும். பணவீக்கத்தின் தாக்கம் நீண்ட கால அளவில் அதிகமாக வெளிப்படும் என்கின்றனர் நிதி மேலாண்மை வல்லுநர்கள்.

பணவீக்கம் எவ்வாறு காலப்போக்கில் பணத்தின் வாங்கும் சக்தியை வியத்தகு முறையில் சிதைக்கும் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது. எனவே, நீண்ட கால நிதி இலக்கு களை திட்டமிடும் போது பணவீக்கத்தை காரணியாக்குவது மிக மிக முக்கியமானது என்பது இதன் மூலம் அறியப்படுகிறது.

பெரும்பாலும், முதலீட்டாளர்கள் செய்யும் ஒரு பொதுவான தவறு, அவர்களின் ஓய்வுகால சேமிப்பின் மதிப்பு காலப்போக் கில் மாறாமல் இருக்கும் என்று கருதுவதுதான். உதாரணமாக, ஒரு நபர் ரூ.5 கோடியுடன் ஓய்வு பெற திட்டமிட்டால், பணவீக கத்தின் காரணமாக அடுத்த 25 அல்லது 30 ஆண்டுகளில் அந்தத் தொகையின் வாங்கும் திறன் ஒரே மாதிரியாக இருக்காது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

பணவீக்கம் ஒருவரின் செலவினங்களை காலப்போக்கில் அதிகரிக்கச் செய்கிறது. ஏனெனில், பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் உயரும். இது பணத்தின் மதிப்பைக் குறைக்கிறது. பணவீக்கம் 6 சதவீதமாக இருப்ப தாக கணக்கில் கொண்டு மதிப்பிட்டால், இன்று நூறு ரூபாய்க்கு விற்கப்படும் பொருள் அடுத்த ஆண்டு ரூ.106–ஆக கருத வேண்டும். எனவே, நீண்ட காலத்துக்கு பணவீக்கத்தை விஞ்சும் வகையில் ஒருவர் பணத்தை முதலீடு செய்வது முக்கியமாகும்.

ஒருவர் ஒரு வேலையைத் தொடங்கும் தருணத்திலிருந்து, ஓய்வூதியத்துக்கான கணிசமான தொகுப்பு நிதியை சேமிப்பதி லும் உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகிறார். பலர் முன்கூட்டியே ஓய்வுபெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ள னர். இதற்கு அதிக தீவிரமான சேமிப்பு உத்திகள் தேவைப்படு கின்றன. உதாரணமாக, ஒருவர் 25 வயதில் பணியாற்றத் தொடங்கி, 50 வயதுக்குள் ரூ.5 கோடியுடன் ஓய்வு பெற வேண் டும் என்று இலக்கு வைத்தால், அந்த இலக்கை அடைய 25 ஆண்டுகள் ஆகும். இதே போன்று, 60 வயது வரை பணி யாற்றத் திட்டமிட்டால், அதே தொகையை குவிப்பதற்கு 35 ஆண்டுகள் ஆகும். குறைந்த கால அவகாசம் கொண்ட நபர், ரூ.5 கோடி இலக்கை அடைய ஒவ்வோர் ஆண்டும் அதிக முதலீடு செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கும் என்கின்றனர் நிதி மேலாண்மை வல்லுநர்கள்.

பணவீக்கம் அதிகரிக்கும்போது பணத்தின் வாங்கும் சக்தி குறைந்து வருவதை இந்தப் பகுப்பாய்வு காட்டுகிறது. அதா வது, ஒருவர் எவ்வளவு நேரம் காத்திருக்கிறாரோ அவ்வளவு பணவீக்கம் அவரது பணத்தின் உண்மையான மதிப்பைக் குறைத்துவிடும் என்பதுதான் நிதர்சனம்...!

# இந்தவார ராசிபலன் 24.11.2024 - 30.11.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 09
நல்ல நேரம்: 09.08 - 10.38 ராகு காலம் : 04.38 - 06.08 திதி : நவமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் முனைப்புடன் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் முற்றிலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு பூர்ண வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்களின் மன துக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். அதன் காரணமாக அந்தஸ்து கௌரவம் உயரும். மாணவர்கள் அக்கறையுடன் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சொந்த பந்தங்களுக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை மேலோங்கும். செய்தொழில், வியாபாரம் நன்றாக நடந்து எதிர்பார்ப்புக்கு மேல் இலாபம் பெருகும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எப்போதும் போல் மன மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத தனவரவு உண்டு. வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு தங்கள் மனதிற்குப் பிடித்த படி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். சிலருக்குத் தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். மனதுக் குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறு வீர்கள். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். ஆயினும், உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. இடைவிடாத வேலை காரண மாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். மாணவர்களுக்கு கவனச் சிதறல்கள் கார ணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றி கரமாக நடக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சனைகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கை யில் முன்னேற முயலுங்கள். மது, மாமிசப் பிரியர்களுக்கு அஜீரணத் தொல்லைகள் எழலாம். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பயன்களையும் அடைவீர்கள்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம். சில ருக்கு சந்ததி விருத்தி ஏற்படலாம். தங்களுக்குப் பிடித்தமான, அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். பெரிய மகான்களின் தரிசனத் தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். மனோதைரி யம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறு வீர்கள். பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளை ஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுதல் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன் னேற்றம் ஏற்படும். ஏமாற றத்தைத் தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். தொலைதூரச் செய்திகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பெரு கும். திடீர்ப் பயணங்கள் மூலமாக ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன் கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்துவிடுவீர்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். சிலருக்குப் பொரு ளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலமாக இருக்கும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பல புண்ணியத் தலங்களுக்குப் பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக் கும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். ஆயி னும், ஓரளவே பணவரவு இருக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களோடு அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். நண் பர்களும் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் கனமாக இருப்பது நல்லது. ஏற்படும். சிலருக்கு உடல் ஆரோக்கிய குறைவு ஏற்படும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சம்பாதிக்கும் திறன் மேம் படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். கடினமான வேலைக ளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சிலருக்கு வீண்பேச்சு, வீண்அலைச்சல் மற்றும் வீண்செலவுகள் ஏற்படும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர் கள் கண்டிப்புடன் நடந்துகொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூல மாக பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், குடும்பத்தாரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களது நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போ தும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். பெண்களுக்கு குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வாக்களித்த முறையை விளங்கிக்கொள்ளுதல்



வீரகத்தி தனபாலசிங்கம்

2024 நவம்பர் பாராளுமன்ற தேர் தல் கண்டிருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல "முதலாவதுகளில்" கூடுதலான அளவுக்கு கவனத்தை ஈர்த்திருப்பவை தேசிய மக்கள் சக்தி சாதித்த இரு சாதனைகளேயாகும்.

தேசிய மக்கள் சக்தியின் பிரமாண்டமான வெற்றி இலங்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகப் படுத்தப்பட்ட பிறகு தனியொரு கட்சி அல்லது கூட்டணி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்ற முதலாவது சந்தர்ப்பத்தை குறித்து நிற்கிறது.

அடுத்ததாக நாட்டில் உள்ள 22 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்தை தவிர, ஏனைய சகலவற்றிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருக்கிறது. இந்த வெற்றியில் மிகவும் பிரத்தியேகமாக கவனிக்க வேண்டியது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஐந்து தேர்தல் மாவட்டங்களில் மட்டக்களப்பை தவிர ஏனைய மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றியமையேயாகும். மலையக தமிழர்கள் பெருமளவில் வாழ்கின்ற மாவட்டங்களிலும் அதே நிலைதான்.

சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு அரசியல் கட்சி தமிழ்த் தேசியவாத அரசியலின் "கோட்டை யாக" விளங்கிய யாழ்ப்பாண மாவட்டம் உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களில் பெரும்பாலான ஆசனங்களை முதற் தடவையாக கைப்பற்றியிருக்கிறது.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதற் தடவையாக வடக்கில் இருந்து தெற்கு வரையும் கிழக்கில் இருந்து மேற்கு வரையும் இன, மத வேறுபாடுகளைக் கடந்து வாக்காளர்களின் அமோக ஆதரவை தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கிறது. இந்த வரலாற்று வெற்றி குறித்து அகவுணர்வுக்கு அப்பாற்பட்ட சரியான வியாக்கியானத்தை அரசியல் வாதிகளோ அல்லது அவதானிகளோ இதுவரையில் வைத்ததாக கூற முடியாது.

தேசிய மக்கள் சக்திக்கு நாடுபூராவும் கிடைத்த மகத்தான ஆதரவு தேசிய ஐக்கியத்தை நோக்கிய வழக்கம் மீறிய குறிப்பிடத்தக்க ஒரு அடியெடுத்து வைப்பு என்றும் வரலாற்று ரீதியாக மத்திய ஆட்சிமுறை மீது வெறுப்புக் கொண்டிருந்த பிராந்தியங்கள் கூட ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் தலைமைத்துவத்தில் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றன என்றும் சில அவதானிகள் கூறியிருக்கிறார்கள்.

பாரம்பரியமான பிளவுகளை கடந்து தேசிய நோக்கு ஒன்றை வளர்ப்பதில் தேசிய மக்கள் சக்தி வெற்றி கண்டிருக்கிறது என்றும் பிரதான அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களில் சிறுபான்மைச் சமூகங்களை அழுத்தும் முக்கியமான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றபோதிலும், வடக்கு, கிழக்கிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் தேர்தல் முடிவுகள் ஒரேமாதிரியாக அமைந்திருப்பது தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொள்வதில் அந்த மக்கள் அக்கறை காட்டத் தொடங்கி விட்டார்கள் என்பதன் வெளிப்பாடு என்றும் அந்த அவதானிகள் கூறுகிறார்கள்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) தலைவர்கள் குறிப்பாக அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா போன்றவர்கள் சிறுபான்மைச் சமூகங்கள் இனவாத அரசியலை நிராகரித்திருக்கின்றன என்று கூறுகிறார்கள்.

வழமைக்கு மாறான முறையில், இந்த தடவை ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தென்னிலங்கையில் தேசியவாத பிரசாரங்களுக்கு இடமிருக்கவில்லை. ராஜபக்சாக்களின் தலைமையில் சிங்கள பௌத்த தேசியவாத அரசியலை முன்னெடுத்த சக்திகள் படுமோசமாக பலவீனமடைந்திருந்திருப்பதும் பிரதான அரசியல் கட்சிகள் சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நேசக்கரம் நீட்டியதும் அதற்கு பிரதான காரணங்களாகும்.

இதுகாலவரை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி வந்த தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலில் மோசமான பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன. கடந்த பாராளுமன்றத்தில் கொண்டிருந்ததையும் விட இந்த தடவை இரு ஆசனங்களை கூடுதலாகப் பெற்றிருப்பது குறித்து இலங்கை தமிழரசு கட்சி பெருமைப்படுவதற்கு எதுவுமில்லை. ஐந்து மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றிய தன் பின்னணியிலேயே அந்த கட்சி தமிழ் மக்கள் மத்தியில் அதன் தற்போதைய அந்தஸ்தை நோக்கவேண்டும்.




"வெறுமனே கடந்த கால போராட்டங்களை மாத்திரம் நினைவுபடுத்திக் கொண்டு உணர்ச்சிவசமான தமிழ்த் தேசியவாத சுலோகங்களை பயன்படுத்தி எந்தப் பயனையும் தராத அரசியல் அணுகுமுறைகளை கடைப்பிடித்துவந்த தமிழ் அரசியல் தலைவர்கள் இனிமேலும் தங்களுக்கு சரியான பாதையை காட்டுவார்கள் என்று தமிழ் மக்கள் நம்பவில்லை."

தமிழ்க் கட்சிகளின் இத்தகைய பின்னடைவுக்கு மத்தியில், தென்னிலங்கையில் சிங்கள பௌத்த கடும்போக்கு தேசியவாதிகள் என்று அடையாளம் காணப்பட்ட பல அரசியல்வாதிகள் இந்த தடவை பாராளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை. இந்த நிகழ்வுப் போக்குகளை அடிப்படையாக வைத்து தெற்கில் சிங்கள பௌத்த தேசியவாதமும் வடக்கில் தமிழ்த் தேசியவாதமும் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக சில விமர்சகர்கள் கூறமுற்படுகிறார்கள்.

குறிப்பிட்ட சில சிங்கள கடும்போக்கு தேசியவாதிகளின் தேர்தல் தோல்வியை சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தோல்வி என்று எவ்வாறு வியாக்கியானம் செய்யமுடியாதோ அதேபோன்றே தமிழ்த் தேசியவாதக் கட்சிகளுக்கு வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட கடுமையான பின்னடைவை தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய வாதத்தை நிராகரித்திருப்பதாக வியாக்கியானம் செய்யமுடியாது.

தமிழ் மக்கள் தேசியவாத சிந்தனைகளின் அடிப்படையிலான தங்களின் நியாயபூர்வ அரசியல் அபிலாசைகளில் அக்கறை காட்டாமல் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு தேர்தலில் ஆதரவை வழங்கினார்கள் என்று கூறமுடியாது.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களாக தங்களை பிதிநிதித்துவம் செய்து வந்த தமிழ் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மீதான வெறுப்பையே வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பின் மூலம் வெளிக் காட்டியிருக்கிறார்கள்.

வெறுமனே கடந்த கால போராட்டங்களை மாத்திரம் நினைவுபடுத்திக் கொண்டு உணர்ச்சிவசமான தமிழ்த் தேசியவாத சுலோகங்களை பயன்படுத்தி எந்தப் பயனையும் தராத அரசியல் அணுகுமுறைகளை கடைப்பிடித்துவந்த தமிழ் அரசியல் தலைவர்கள் இனிமேலும் தங்களுக்கு சரியான பாதையை காட்டுவார்கள் என்று தமிழ் மக்கள் நம்பவில்லை. அத்துடன் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு தமிழ் அரசியல் சக்திகள் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் தமிழ் அரசியல் சமுதாயம் சிதறுப்பட்டு நிற்பதனால் தமிழ் மக்கள் சீற்றமடைந்திருக்கிறார்கள்.

தங்கள் மத்தியில் தமிழ்க் கட்சிகளுக்கு மாற்றாக நடைமுறைச்சாத்தியானதும் விவேகமானதுமான அரசியல் பாதையில் தங்களை வழிநடத்தக்கூடிய ஒரு அரசியல் சக்தி இல்லை என்பதனாலேயே தமிழ் மக்கள் வேறு வழியின்றி தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்பினார்கள். ஜனாதிபதி தேர்தலில் அநுரா குமார திசாநாயக்கவை பெருமளவில் ஆதரிக்காத அந்த மக்களுக்கு அவரின் வெற்றிக்கு பிறகு தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதில் நாட்டம் காட்டக்கூடிய ஒரு சூழ்நிலை உருவானது.

பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களுக்கு தங்களிடம் வந்த தமிழ்த் தலைவர்களிடம் பல பகுதிகளில் தமிழ் மக்கள் தங்களிடம் இந்தத் தடவை தேசிய மக்கள் சக்திக்கே வாக்களிக்கப்போவதாக நேரடியாகவே கூறினார்கள். தங்களது மக்களின் உணர்வுகளை சரியான முறையில் மதிப்பிடுவதற்கு தவறிய அந்த தலைவர்கள் வழமை போன்றே தமிழ்க் கட்சிகளுக்கு மாத்திரமே தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையில் மெத்தனமாக இருந்து விட்டார்கள்.

தவறான ஆட்சிமுறைக்கும் ஊழல்தனமான அரசியல் கலாசாரத்துக்கும் பொறுப்பான பாரம்பரியமான பிரதான அரசியல் கட்சிகளை தென்னிலங்கை மக்கள் நிராகரிப்பதற்கு சிறந்த மாற்றுச் சக்தியாக தேசிய மக்கள் சக்தி விளங்கியது. அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான காலப்பகுதியில் மாற்றங் கண்ட அரசியல் சூழ்நிலையை அனுகூலமாக பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி தன்னை ஒரு பாரிய அரசியல் இயக்கமாக வளர்த்துக் கொண்டது.

அதேபோன்றே வடக்கு, கிழக்கிலும் தமிழ் அரசியல் கட்சிகளை நிராகரிப்பதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு தேசிய மக்கள் சக்தியை தவிர வேறு மாற்று இருக்கவில்லை. கடந்தகால அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்று நிலைவரங்கள் வேண்டிநிற்பதற்கு ஏற்றமுறையில் அணுகுகுறைகளை வகுக்கும் பழக்கமோ அல்லது பக்குவமோ இல்லாத தமிழ்க் கட்சிகள் தற்போது மக்கள் புகட்டியிருக்கும் பாடத்தில் இருந்தாவது எதையாவது படித்துக் கொள்வார்களோ தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க, இனவாத அரசியலும் மதத் தீவிரவாதமும் மீண்டும் தலையெடுப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று கடந்த வியாழக்கிழமை புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய ஜனாதிபதி திசாநாயக்க கூறினார். இனவாதமும் மதவாதமும் மீண்டும் தலையெடுக்காமல் இருப்பதை உறுதிசெய்வது என்பது அவரது அரசாங்கத்தின் அணுகுமுறைகளிலும் செயற்பாடுகளிலுமே முற்றுமுழுதாக தங்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இன, மத வேறுபாடுகளை கடந்து மக்கள் தனது அரசாங்கத்துக்கு வழங்கியிருக்கும் மகத்தான ஆதரவு இனவாதம் மீண்டும் தலையெடுக்காமல் இருக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க உதவும் என்று ஜனாதிபதி நம்புகிறார் என்றால் அதே இனவாதம் தோற்றுவித்த பிரச்சினைகளுக்கு காலம் தாழ்த்தாமல் தீர்வுகளை காண்பது அவசியமானதாகும். சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் மதிக்காத தென்னிலங்கை அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டியது ஜனாதிபதி தனது குறிக்கோளை அடைவதற்கான முதற் தேவையாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு இதுகாலவரையில் முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் எதிர்த்த கசப்பான கடந்த காலத்தில் இருந்து விடுபடுவதற்கான தெளிவான அறிகுறிகளை இதுவரையில் தேசிய மக்கள் சக்தி குறிப்பாக ஜே.வி.பி. காண்பிக்கவில்லை . அண்மைக்காலத்தில் அரசியலமைப்புக்கான 13ஆவது

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மையம் கொள்ள போகும் சீன - இந்திய வல்லாதிக்க போட்டி!

- மதுசூதன்




யாழ் ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற சீன தூதுவரின் ஊடக சந்திப்பு ஆனது மிகப் பெரும் அரசியல் முக்கியத்துவம் பெற்றதாக அமைகிறது. இது ஒரு வெறும் ஊடக சந்திப்போ அல்லது நிகழ்வோ என கடந்து போய்விட முடியாத அளவில் முக்கியம் பெறும் ஒன்றாகும்.

ஒரு பிராந்திய வல்லாதிக்க அரசொன்றின் தூதுவர் ஆனவர் தன் தூதுவராலயத்தில் ஊடக சந்திப்பு என்று அறிவித்தாலே அனைத்து ஊடகங்களும் அள்ளுண்டு போய் நிற்கும். ஆனால் அதெல்லாம் விடுத்து ஒரு வல்லரசின் தூதுவர் என்ற மனத்தோரணையில் இருந்து கீழிறங்கி வந்து ஒரு சாதாரண அரசியல் வாதியை போல யாழ் ஊடக அமையத்திற்கு நேரடியாகவே விஜயம் செய்து ஊடகங்களில் பேசியிருக்கிறார் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் கி லென் ஹோங் அவர்கள். இந்த ஊடக சந்திப்பின் மூலம் பலமான செய்தியொன்றை தமிழ் மக்களுக்கு சொன்னாரோ தெரியவில்லை இந்தியாவின் காதருகே நின்று கனதியான செய்தியை சொல்லிவிட்டு போயிருக்கிறார். அவரின் நோக்கமும் ஒரே நிகழ்வில் பல தரப்புகளுக்கு கனதியான செய்தியொன்றை சொல்வதாகும். சீனத்தூதுவர் உதிர்த்த வார்த்தைகளினை மிக உன்னிப்பாக கவனித்தால் அவர்களது வருகையின் ஆழம் மிகத்தெளிவாக புரியும்.

1) யாழ்பாண மக்கள் தெற்கு அரசியலுடன் கைகோர்த்தமை மகிழ்ச்சி தருகிறது. இந்த கருத்தின் பால் தமிழர்களின் அரசியல் நகர்வுகளை எவ்வாறு சீனா மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்பது புலப்படும். இலங்கையில் சீன ஆதிக்கம் மகிந்த அரசுடன் அதிகமாக அன்னியோன்னியமாக ஏற்படுத்தப்பட்ட பின் அது இலங்கைத்தீவின் முழுவதிலும் முக்கிய பிராந்தியங்களில் முதலீடுகளை மேற்கொள்ளவும் தலையீடுகளை மேற்கொள்ளவும் முனைந்திருக்கிறது. பெரும் அசுர பெரும்பான்மையோடு உருவெடுத்து நிற்கும் ஆட்சியொன்றில் அவர்கள் மேலும் முதலீடுகளையும் தலையீடுகளையும் மேற்கொள்ள முனைவது ஆச்சரியமல்ல! கம்யூனிசிய கொள்கை வழி வந்த ஜே வி பி அரசு அமைவது சீன வல்லாதிக்க பக்கம் அரசு சாய்ந்திடுமோ என்ற அச்சம் இந்தியா அமெரிகாவிற்கு இருந்து வந்த ஒன்று தான். கடந்த ஜனாதிபதி தேர்தலில் சுய வேட்பாளர் என்ற நிகழ்ச்சி நிரல் ஏன் முன்னிறுத்தப்பட்டது எந்த ஆய்வு அனுமானங்களின் அடிப்படையில் நிறுத்தப்பட்டது என்பதை இந்த தறுவாயில் மக்கள் விளங்கியிருப்பர். பாராளுமன்ற தேர்தலில் யாழ் மாவட்டத்தில் இருந்தே 3 ஆசனம் வழங்கும் வகையில் வாக்கு ஜே.வி.பிக்கு சென்றிருக்கின்றதென்றால் ஜனாதிபதி தேர்தலில் மக்களுக்கு தேசியம், சர்வதேச கவனம் என்ற தோரணையில் பொது வேட்பாளர் என்ற ஒரு வலைவிரிப்பு இல்லாதிருந்தால் அனுரவுக்கு தான் அதிக வாக்குகள் வடக்கில் இருந்து போயிருக்கும். அந்த அனுர அலையினை முன்னரே அனுமானித்திருந்த பிராந்திய சக்திகளின் அனுரவை தலையெடுக்க விடாத செயல்பாடுகள் சிறு முயற்சிகள் அவை! ஆக அனுரவுக்கு ஜனாதிபதி தேர்தலில் போய் சேர வேண்டிய வாக்குகளில் கணிசமானவை பாராளுமன்ற தேர்தலூடாக போய்சேர்ந்திருக்கிறது. இதை தான் தேர்தல் முடிந்த கையோடு மிகச்சீக்கிரமாக யாழில் வைத்து சூதானமாக சீனத் தூதுவர் சொல்லியிருக்கிறார். ஏனெனில் அவர்களுக்கு என்ன நிகழ இருக்கின்றது என்பது முன்னரே தெரிந்திருக்கும். அதைவிட இந்த கருத்தின் ஆழம் ஆனது அதாவது வடக்கு மக்கள் மத்திய அரசுடன் கைகோர்த்தமை மகிழ்ச்சி தருகின்றது என்ற கருத்து எந்த மன நிலையில் வெளிப்பட்டது என்றால் வடக்கு அரசியல் வாதிகளின் 90 வீதமானோரை இந்தியாவே கையாண்டு வந்திருக்கிறது. இந்தியா கையாண்ட அத்தனை அரசியல் தரப்புக்களும் வடக்கில் செல்வாக்கற்று போன பின்னணியிலேயே சீனத்தூதுவரின் மேற்படி கருத்தாடல் அமைந்திருக்கிறது. இரண்டாவது அவரது கனதியான கருத்து.

2) இந்திய உறவும் முக்கியம் அதே போல் சீன உறவும் முக்கியம் இந்த கருத்து தான் மிக கனதியானது. தமிழ் மக்கள் உறவு என்பது இந்தியாவுடன் பின்னி பிணைந்தது என்பது இந்தியா இலங்கையினை தமிழர் தரபின் பிரச்னைகளூடாகவே கையாண்டு வருவது வாடிக்கை. அந்த வகையில் வடக்கின் இதயத்தில் யாழில் வைத்து மேற்கூறிய கருத்தை சொல்கிறார் என்றால் இந்தியாவின் காதுக்குள் ஏதோ சொல்ல முனைகிறார். அது யாழ்ப்பாண மக்களுக்கு சொன்னாரோ தெரியாது ஆனால் இந்தியாவிற்கு தெட்ட தெளிவாக ஒன்றை சொல்கிறார் வடக்கில் சீனா கால்பதிக்க போகிறது என!! கடந்த அரசுகளில் சீனா நெடுந்தீவில் மின்னிலையங்களை அமைக்க முதலீட்டுப் பணிகளை ஆரம்பித்த போதும் இந்திய தலையீட்டினால் அவை இடைநிறுத்தப்பட்டன. இப்போது புதிய அனுர அரசு ஆனது தேர்தல் காலங்களில் சொன்னது போல மூடப்பட்ட வடக்கில் உள்ள தொழிற்பேட்டைகள் மீளவும் இயக்கப்படும் என்று விஞ்ஞாபனங்களில் வெளிப்படுதியிருந்தார்கள். அதற்கு முதலீடுகள் அவசியம் அந்த முதலீடுகளை பிராந்திய வல்லரசுகள் மூலமாகவே இலங்கை பெறும். அதில் இந்தியா சீனா முதன்மை பெறும் நாடுகளாகும். காங்கேசன்துறை துறைமுகம், சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் உப்பள தொழிற்சாலை என்பன மீள இயக்கபடுவதோடு மட்டுமல்லாது வேறு பல புதிய முதலீடுகளும் கொண்டு வரப்படலாம். அந்த முதலீடுகளுக்கான சீன மற்றும் இந்தியா பூகோள போட்டி இடம்பெற போவது தெட்ட தெளிவாகவே தெரிகின்றது. முன்னர் மோடி அரசின் தமிழ்நாட்டு முகவரான அண்ணாமலை அவர்கள் காங்கேசந்துறை கார்பர், பலாலி சர்வதேச விமான நிலையம் என்ற பல அபிவிருத்திகளை மோடி அரசு செய்வது பற்றி யாழில் வைத்தே கூறியிருக்கிறார். [illegible]தியில் வடக்குக்கு முக்கியத்துவம் அளித்து சீனத் தூதுவரே யாழ் ஊடக மையம் போய் இந்திய உறவு முக்கியம் போல சீன உறவும் முக்கியம் என்ற கருத்துக்கு பின் ஏராளம் அர்தங்கள் பொதிந்துள்ளன. சீனா வடக்கில் அகல கால் பதிக்க நினைக்கிறது. வடக்கில் முதலீடுகளை செய்ய விரும்புகிறது வடக்கு மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற மென்வலு வார்த்தை பிரயோகமே அது.

> இலங்கை பன்னாட்டு பூகோள அரசியலில் சிக்கி தவிக்கும் தருவாயில் இனி வடக்கு சீன -இந்திய வல்லாதிக்க போட்டியில் சிக்கி தவிக்க இருப்பது வெட்ட வெளிச்சமாகிறது.

அது வடக்கு மக்களை வசியப்படுத்த பல வேலைகளை அண்மைக்கலமாக முன்னெடுத்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் சீன தூதுவர் தமிழர் தம் பாரம்பரிய வேட்டி உடையில் மேலாடை அணியாமல் நல்லூர் ஆலயத்தில் தரிசனம் செய்தமை தமிழர்கள் மத்தியில் பேசுபொருளாகியிருந்தமையினை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆக அண்மைகாலங்களாக வடக்கு மக்களை வசியப்படுத்தவும், குசிப்படுத்தும் வேலைகளில் சீன இறங்கியிருப்பதானது வடக்கிற்கு சீனா எவ்வளவு முக்கியத்தினை வழங்கி வருகிறது என்பதை அறியலாம். ஆக வடக்கில் இந்தியா சீன முதலீட்டு போட்டி நிலையொன்று தமிழர் அரசியலை மையமாக கோண்டு மேலெழ இருப்பது அம்பலமாகிறது.


மூன்றாவது முக்கிய விடயம் யாழ் பல்கலைக்கழகத்துடன் தொடர்புகளை பேண விரும்புகிறோம் என்பதும் முயன்றும் தடைகள் ஏற்படுவது வருத்தமளிக்கிறது என்ற சீன தூதுவரின் கருத்து. இதன் பின்ணணியில் யாழ்பல்கலைக் கழகம் தமிழர்களின் கல்வி கலாச்சார அச்சாணியாக சுழன்று வரும் நிறுவனம். அது உலக பல்கலைக்கழகங்களோடு ஆராய்ச்சி, புலமைப்பரிசில், மாணவர் பரிமாற்றங்கள், புலமை பரிமாற்றங்கள், நிதிபரிமாற்றங்கள் என்பவற்றை செய்து வரும் நிறுவனம். யாழ் பல்கலைக்கழகம் உலக பல்கழைக்கழகங்களுடன் தொடர்புபட்டு செயல்பட்டு வந்தாலும் அண்டை நாடான இந்தியாவின் கலை காச்சார அரசியல் பொருளாதாரத்தின் தாக்கங்கள் நிறைந்த ஒரு நிறுவனம். இந்திய பல்கலைக்கழகங்களுடன் பல்லாண்டுகால தொடர்பை பேணும் நிறுவனம். அதற்குள் சீனாவும் கால் பதிக்க முனைகிறது. முன்னரும் சீன உயர் கல்வி புலமைபரிசில்களை சீனா யாழ். பல்கலைகழகத்துக்கு வழங்கிய பின்னணி யில் பல இந்திய தரப்புடனான முறுகல்கள் இருந்து வந்திருக்கின்றன. அந்த தோரணையில் தான் யாழ் பலகலைகழகத்துடன் இணைந்து செயல்பட விரும்புகிறோம் ஏற்பட்ட தடைகளுக்கு வருந்துகிறோம் என்று சீன தூதுவர் வெளிப்படையாகவே பேசியிருக்கிறார். ஆக இந்த சீனத்தூதுவரின் திடீர் யாழ் வருகையும் அவரது பேச்சுக்களும் தமிழர்களுக்கும் இந்தியாவிற்கும் கனதியான செய்தியை சொல்லி போயிருக்கிறார். அதாவது மத்திய அரசுடன் மக்கள் கைகோர்த்து நிற்பதாலும் மத்திய அரசின் அனுமதிகளோடு எதிர்காலத்தில் வடக்கில் முதலீடுகளையும் யாழ்பல்கலைக்கழகத்துடன் கல்வி கலாச்சார தொடர்புகளையும் மிகவீரியத்துடன் முன்னெடுக்க இருக்கிறோம் என்று அழுத்தமாக சொல்லிவிட்டு போயிருக்கிறார். அதுவும் இந்தியாவின் காதோரம் வந்தமர்ந்து சொல்லிவிட்டு போயிருக்கிறார். இலங்கை பன்னாட்டு பூகோள அரசியலில் சிக்கி தவிக்கும் தருவாயில் இனி வடக்கு சீன - இந்திய வல்லாதிக்க போட்டியில் சிக்கி தவிக்க இருப்பது வெட்ட வெளிச்சமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பட்டியல் தெரிவில் மறைகரங்களின் சூதுவாது!

பனங்காட்டான்

அனைவரும் எதிர்பார்த்திருந்த இரண்டு முக்கிய தேர்தல்கள் எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்தி, புதிய நாடாளுமன்ற அமர்வும் நிகழ்ந்தேறிவிட்டது. 22 அமைச்சர்கள், 29 பிரதி அமைச்சர்கள் நியமனமாகி பதவிகளையும் ஏற்றுவிட்டனர்.





இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் இனி இடமில்லையென்று அடிக்கடி பொழிந்து வரும் புதிய ஜனாதிபதி தோழர் அநுர குமார தாம் சொல்வதை இன்னும் செயலில் காட்டவில்லையென்ற குற்றச்சாட்டு இப்போதே முன்வைக்கப்படுகிறது.

22 பேர் கொண்ட அமைச்சரவையில் இருவர் தமிழர். தென்னிலங்கையின் மாத்தறையில் தெரிவான பெண்மணி ஒருவர். மற்றவர் ஜே.வி.பி.யில் முன்னர் எம்.பி.யாக இருந்தவர். பெண் அமைச்சர் சிங்கள மொழியில் பதவிப் பிரமாணம் செய்ய, ஆண் அமைச்சர் தனித்தமிழில் நிகழ்த்தினார். முஸ்லிம்கள் எவரும் அமைச்சராக நியமிக்கப்படவில்லை என்ற முணுமுணுப்பு காணப்படுகிறது.

முழுமையாக ஆண்களைக் கொண்ட பிரதி அமைச்சர்களில் இருவர் தமிழர். ஒருவர் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்தும் அடுத்தவர் திருமலை மாவட்டத்திலிருந்தும் தெரிவானவர். வடக்கிலிருந்து தெரிவான ஐவரில் எவருக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

நாடாளுமன்ற சபாநாயகர் சிங்களவர், உபசபாநாயகர் முஸ்லிம், குழுக்களின் தலைவர் பெண்மணி ஆகிய மூவரும் ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்தவர்கள். வழமையாக இவர்களில் ஒருவர் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராகவும் வேறு கட்சியைச் சேர்ந்தவராகவும் நியமிக்கப்படுவதுண்டு. இதுவும் இம்முறை தவிர்க்கப்பட்டுவிட்டது. இனவாதத்துக்கு இடமில்லை என்று கூறி வரும் கட்சியில் ஏதாவது பதவிக்கு இன அடிப்படையில் இடம் கேட்டால், இனவாதத்துக்கு இந்த ஆட்சியில் இடமில்லை என்பது பொருத்தமான பதிலாக வரக்கூடும்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 175 வரையானவர்கள் புதியவர்கள். அமைச்சரவையில் பேராசிரியர்கள், முனைவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் என்று பல்துறை நிபுணர்களை காணமுடிகிறது. எதிரணியினர் முற்கூட்டியே கூறியது போன்று ஆற்றலில்லாதவர்கள் குறைவாக உள்ளது. ஆனால், அரசியல் அனுபவம் இல்லாதவர்களாக இருப்பது குறையாக தெரியவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பலவகை கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் சொகுசு வாகனங்கள் இல்லையாம். விசேட சலுகைகள் குறைக்கப்படுகிறது. குடியிருப்பு இடங்கள் வழங்குவதில் புதிய நடைமுறைகள். நாடாளுமன்ற உணவகத்திலும் பல சலுகைகளைக் குறைக்கத் திட்டம். சம்பளம் பெறாமல் பணியாற்றுவதற்கும் பலர் முன்வந்துள்ளனர். அமைச்சர்களைக் கண்காணிக்க ஒரு குழுவை நியமிக்கப் போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஆரம்பம் நம்பிக்கையூட்டுவதாக இருப்பினும், இது எவ்வளவு காலத்துக்கு என்ற கேள்வி பலரிடம் எழாமல் இல்லை. பேச்சு பல்லக்கு என்ற கருத்து பரவலாக நிலவுகிறது. அமைச்சரவை பதவியேற்பு நிகழ்விலும், நாடாளுமன்ற முதல்நாள் அமர்விலும் ஜனாதிபதி ஆற்றிய உரை ஆழமானது. பெரும்பான்மைப் பலத்தை அளவுக்கதிகமாக எண்ணி கண்மண் தெரியாமல் செயற்பட்டால் நிலைமை என்னாகும் என்பதை ஆலோசனையாகவும் எச்சரிக்கையாகவும் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸவாதியான ஜனாதிபதி பௌத்த வழிபாட்டுக்குத் தலங்களுக்குச் செல்லும்போதும் பொது நிகழ்வுகளிலும் பௌத்த பிக்குகளை சந்திக்கும் வேளையில் அவர்கள் ஜனாதிபதியின் கையில் நூல் கட்டி ஆசிர்வதிக்கத் தவறுவதில்லை. அந்த நூல்கள் பின்னர் அவர் கைகளில் காணப்படுவதில்லை. ஆனாலும் தாம் ஒரு பௌத்தர் என்பதை மறவாது செல்லுமிடமெங்கும் விகாரைகளைத் தரிசிக்கிறார்.

மதவாதமற்ற ஆட்சியென்று கூறிக் கொண்டு பௌத்த சாசன அமைச்சை நிறுவி அதற்கொரு அமைச்சரையும் தனியாக நியமித்துள்ளார். முன்னைய அரசாங்கங்களுக்கும் இவரது ஆட்சிக்கும் இவ்விடயத்தில் மாற்றம் தெரியவில்லை. சகல மதங்களையும் சமமாக மதிப்பவராயின் - அதுதான் மதவாதமற்ற ஆட்சியெனின், பௌத்த சாசன அமைச்சு என்ற பெயரை பொதுவாக மதவிவகார அமைச்சு என்று ஏன் மாற்றக் கூடாது. இரண்டு தமிழ் அமைச்சர்களும் இதனை கவனத்தில் எடுப்பார்களா?

இனவாதத்துக்கு இடமில்லை என்பதை கொள்கையாக ஏற்றுக் கொண்டது நல்லது. அதற்காக சிறுபான்மை இனமொன்று இழக்கப்பட்ட தனது பிறப்புரிமையையும் வாழ்வுரிமையையும் மீளப் பெற கோருவதை அல்லது அதன்பால் செயற்படுவதை இனவாதம் என்று கூறி தடை செய்ய முனையக்கூடாது. மறுபுறத்தில் தெற்கிலிருந்தவாறு இனவாத நச்சுக் கருத்துகளை தொடர்ந்து வெளியிட்டு வரும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வருட மாவீரர் நினைவு வணக்கம் எந்தவிதத் தடையுமின்றி இடம்பெறும் போலத் தெரிகிறது. இதனைத் தடை செய்ய பொலிசார் இதுவரை நீதிமன்றங்களின் படி ஏறவில்லை. இம்மாதம் 26ம் 27ம் திகதிகளில் இடம்பெறவிருந்த நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தை மாவீரர் நினைவு வாரத்துக்காக பின்போட்டதுகூட இன இணக்கத்துக்கான நற்குறி. இக்காலத்தில் தனியார் காணிகளிலுள்ள ராணுவ முகாம்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதும் வரவேற்கப்படுகிறது.

இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் இனி இடமில்லையென்று கூறிவரும் ஜனாதிபதி அநுர குமார, தெற்கிலிருந்து இனவாதம் கக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களை எவ்வாறு அடக்கப் போகிறார்? பௌத்த மதத்துக்கென தனியாக ஓர் அமைச்சை நியமித்திருப்பவர் அதனைத் தவிர்த்து அனைத்து மதங்களுக்குமென பொதுவாக மதவிவகார அமைச்சு ஒன்றை ஏன் அமைக்கக்கூடாது?

அடுத்த சில மாதங்களில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபை தேர்தல்களிலும், மாகாண சபைத் தேர்தல்களிலும் தமிழர் பிரதேசத்தை முழுமையாகக் கையகப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வகை செயற்பாடுகள் இடம்பெறுகிறதோ என்ற ஐயம் தமிழ் மக்களிடம் இல்லாமல் இல்லை. கடந்த ஏழரை தசாப்தமாக சிங்கள தேசத்திடம் தமிழர் கற்றதும் பெற்றதுமான அனுபவங்களின் வெளிப்பாடு இது.

மீண்டும் தமிழரசு மற்றும் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் இந்தியாவை நாடிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழர் தரப்பு பிரிந்திருக்காது ஒன்றுபட்டு ஒரே குரலில் நிற்காதவரை எதனையும் பெற முடியாது என்பதே இந்தியாவின் பதிலாகத் தொடருகிறது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் பழைய கதை, அதனை இனி மறந்துவிட வேண்டுமென்று இந்திய தரப்பு ஏற்கனவே நேரடியாகக் கூறிய பின்னரும், இந்தியா 13ம் திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென கூறுவதை மட்டும் தான் தமிழர் தரப்பால் இப்போது கேட்க முடிகிறது.

இவ்வாறான எதிலும் முடிவற்றதான அரசியல் சூழ்நிலையில் தேசியப் பட்டியல் தெரிவு என்பது தலையாய பிரச்னையாக நிற்கிறது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய பட்டியலில் ரவி கருணநாயக்க நியமனமானது கட்சிக்குள் முரண்களை ஏற்படுத்தியுள்ளது. கட்சித் தலைவருக்குத் தெரியாது தம்மிஷ்டப்படி தாம் விரும்பிய ரவி கருணநாயக்கவை கட்சிச் செயலாளர் தேசியப்பட்டியலில் நியமித்துவிட்டதாக குற்றம் சாட்டப்படுகிறது.

சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியில் இதுவரை ஒருவர் மட்டுமே தேசியப் பட்டியலில் நியமனமாகியுள்ளார். மிகுதி இடங்கள் நிரப்பப்படவில்லை. பத்துக்கு மேற்பட்டவர்கள் இதற்குப் போட்டி. ஒரு பெண்மணியை நியமிக்க சிலர் விரும்புகின்றனர். மனோ கணேசனுக்கு இடம் வழங்கப்பட வேண்டுமென கேட்கப்படுகிறது. இவரை நியமிக்காவிடின் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்த தமிழர் ஒருவர்கூட இல்லாது போகும் நிலை இன்றையது. (ஏற்கனவே கண்டி மாவட்டம் தமிழர் ஒருவர் தெரிவாகாத பிரதேசமாக மாறிவிட்டது)

தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக தெரிவான ப.சத்தியலிங்கம் தொடர்பான பல செய்திகள் ஊடகங்களில் வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் படுதோல்வி கண்ட சுமந்திரனின் சகாவாக மட்டுமன்றி அவரது வழிநடத்தலில் சத்தியலிங்கம் இயங்குவதால் இவர் மீதான சந்தேகம் வீடுக்குள் அதிகரித்து வருகிறது.

விரைவில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வவுனியா நகரசபையின் முதல்வர் பதவி, அல்லது வடமாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவியை வழங்குமிடத்து, சத்தியலிங்கம் எம்.பி. பதவியை ராஜினாமா செய்துவிடக் கூடுமென்றும், அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு சுமந்திரன் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படலாமெனவும் பரவலாக பேசப்படுகிறது.


தேர்தல் சட்டத்தின்படி கட்சி ஒன்றின் செயலாளரே இவ்வாறான தெரிவுகளிலும் நியமனங்களிலும் ஒப்பமிட்டு தேர்தல் ஆணையகத்துக்கு அனுப்பும் தகுதி பெற்றவர் என்ற நிலையில், தமிழரசு கட்சியின் செயலாளராக சத்தியலிங்கம் செயற்படுவதால் கட்சியில் வேறு எவருக்கும் தெரியாது இவர் சுமந்திரனை நாடாளுமன்றத்துக்கு அனுப்பலாம் என்ற அச்சம் பலராலும் பகிரங்கமாக முன்வைக்கப்படுகிறது.

ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் எவருக்கும் அறிவிக்காது ரவி கருணநாயக்கவை தேசியப் பட்டியல் எம்.பியாக அதன் செயலாளர் ஆணையாளருக்கு அறிவித்ததை உதாரணமாகக் கொண்டு, சத்தியலிங்கம் - சுமந்திரன் உறவாடலை உள்வீட்டுக்காரர்கள் நோக்குகின்றனர்.

'மூக்கு உள்ளவரை சளி போகாது' என்ற தெனாலிராமன் கதை போல உள்ளது தமிழரசுக் கட்சியில் உள்ள 'அந்த' ஒருவரின் மறைகர செயற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியம் கூறு போடப்பட்டுள்ளது!

ச. வி. கிருபாகரன்
(பிரான்ஸ்)

சிறீலங்காவின் பாரளுமன்ற தேர்தல் முடிவுகளை தொடர்ந்து, சர்வதேசம் உட்பட உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரவலாக பேசப்படும் விடயம் என்னவெனில், தமிழ் தேசியம், ஜேவிபி அல்லது தேசிய மக்கள் சக்தியிடம் படு தோல்வி கண்டுள்ளது என விவாதிக்கப் படுவது பற்றி, தேர்தல் முடிவுகளுடன் இங்கு ஆராய கடமைப்பட்டுள்ளோம்.

ஆனால் இக் கட்டுரை யாழ்பாணம் மாவட்டத்தில் தேசிய மகக்ள் சக்தியின் வெற்றியை குறைத்து கணிப்பிடுவதற்காக எழுதப்படவில்லை என்பதை வாசகர்களிற்கு முதற்கண் கூற விரும்புகிறேன். தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளதை யாரும் மறுதலிக்க முடியாது.

இக்கட்டுரையின் முழு நோக்கம், யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல, பொதுவாக தமிழர்களது தாயாக பூமியான வடக்கு கிழக்கில், கடந்த தேர்தலில் தமிழ் தேசிய கொள்கையில் பயணிக்கும் கட்சிகள், தே.ம.ச.யிடம் பல ஆசனங்களை பறி கொடுத்துள்ள போதிலும், வடக்கு கிழக்கில் மக்களது வாக்குகள் எப்படியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்வது எமது தலையாய கடமையாகும்.

முதலாவதாக, ஜனநாய அடிப்படையில், சுதந்திரமாக வெளிப்படையாக நடைபெற்ற தேர்தலில், வடக்கு கிழக்கில் காணப்பட்ட தேர்தல் மாவட்டங்களான - திகாமடுல்ல (அம்பாறை), திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி, யாழ்பாணம் மாவட்டங்களில் தே.ம.ச. பெற்ற வாக்குகளையும் ஆசனங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். (அட்டவணை 1)

அட்டவணை 01

| | | |
|---|---|---|
| அம்பாறை | 04 ஆசனங்கள் | 146,313 வாக்குகள் |
| திருகோணமலை | 02 ஆசனங்கள் | 87,031 வாக்குகள் |
| மட்டக்களப்பு | 01 ஆசனம் | 55,498 வாக்குகள் |
| வன்னி | 02 ஆசனங்கள் | 39,894 வாக்குகள் |
| யாழ்பாணம் | 03 ஆசனங்கள் | 80,830 வாக்குகள் |

தேசிய மக்கள் கட்சி, வடக்கு கிழக்கில் மொத்தமாக 409,566 வாக்குகளை பெற்று, 12 ஆசனங்களை வெற்றி கொண் டுள்ளனர் என்பதை ஏற்று கொண்டு, இவ் தேர்தல் முடிவுகளை முதலில் அங்கீக ரிக்க கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்து, 2004ம் ஆண்டிலிருந்து தாய் கட்சியாக திகழ்ந்த "தமிழ் தேசிய கூட்ட மைப்பிலிருந்து" பிரிந்து பல கட்சிகள், வடக்கு கிழக்கில் மொத்தமாக எவ்வளவு வாக்குகளையும், ஆசனங்களையும் பெற் றார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். (அட்டவணை 2)

இங்கு, "தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து" பிரிந்த பல கட்சிகள், வடக்கு கிழக்கில் மொத்தமாக 343,381 வாக்குகளை பெற்று, 09 ஆசனங்களை வெற்றி கொண்டுள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆடுத்து, கூறப்படும் மொத்த வாக்குகள் என்பது, முன்னைய தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்த கட்சிகளிற்கு கிடைத்த வாக்குகள் மட்டுமே

அட்டவணை 02

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 01 ஆசனம் | 33,632 | + 7227 | + 1090 | | | = 41.949 வாக்குகள் |
| திருகோணமலை | 01 ஆசனம் | 34,168 | + 1542 | | | | = 35,710 வாக்குகள் |
| மட்டக்களப்பு | 03 ஆசனங்கள் | 96,975 | + 14,540 | + 1,784 | | | = 113,299 வாக்குகள் |
| வன்னி | 02 ஆசனங்கள் | 29,711 | + 21,102 | + 7,492 | | | = 58,305 வாக்குகள் |
| யாழ்ப்பாணம் | 02 ஆசனங்கள் | 63,327 | + 27,986 | + 22,513 | + 13,295 | + 7,496 | = 94.118 வாக்குகள் |

கணக்கிடப்பட்டுள்ளது. யாழ்பாணம் மாவட்டத்தில் மட்டும், தமிழரசு கட்சியிலிருந்து இறுதி நேரத்தில் பிரிந்து, தேர்தலில் நின்ற சுயேச்சை குழுவின் வாக்குகளும், இவ் மொத்த வாக்குகளில் கணக்கிடப்பட்டுள்ளது .

இதேவேளை, தமிழர் ஐக்கிய விடுதலை முன்ணனி பெற்ற 5,205 வாக்குகளும் தமிழ் தேசியத்திற்கானது, ஆனால் இங்கு மொத்த வாக்குகளில் இது கணக்கிடப்படவில்லை என்பது குறிப்பிடதக்கது.

அடுத்து, வடக்கு கிழக்கில் 749,762 பேர் வாக்களிக்கவில்லை என்பதுடன், ஏற்கனவே தே.ம.ச.க்கும், தமிழ் தேசிய கட்சிகளிற்கும் கிடைத்த வாக்குகளும், வாக்களிக்காதவர் தொகையும் ஏறக் குறைய சமனாக காணப்படுகிறது. இதே இடத்தில் வாக்களிக்கப்பட்டவற்றில் 94,489 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

அத்துடன், வடக்கு கிழக்கில் தேர்தலில் போட்டியிட்ட வேறு சில சுயேச்சை வேட்பாளர்களும், தமிழ் தேசியத்தில் அக்கறை கொண்டவர்கள் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

சில சுயேச்சை குழுக்கள், பணம் படைத்த சிலரினால், வாக்குகளை பிரித்து சின்னபின்னமாக்கும் நோக்குடன், களம் இறக்கப்பட்டவார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

கடந்த 2020ம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பை சேர்ந்த பிள்ளையான் என கூறப்படும் சந்திரகாந்தன் சிறையில் இருக்கும் வேளையில் வெற்றி பெற்றார் என்பதும், இனவாதியான சரத் வீர சேகரா கொழும்பு மாவட்டத்தில் 328, 092 வாக்குகளை எப்படியாக பெற்று வெற்றி பெற்றார்கள் என்பதை, எனது முன்னைய கட்டுரைகளில் எழுதியுள் ளேன்.

வடக்கு கிழக்கில் மிக நீண்ட காலத் திற்குப் பின்னர் ஒரு சிங்கள கட்சி வெற்றி பெற்றுள்ளது என்பது உண்மை அல்ல. தெற்கில் தே.ம.ச.க்கு எதிரானவர்கள், தமிழர்களின் முக்கிய மொழி கலை கலாச்சரத்தை நீண்ட காலமாக கட்டி காத்து வளர்த்த யாழ்பாணம் மாவட்ட மக்கள், ஏன் ஓர் இனவாத சிங்கள கட்சிக்கு வாக்களித்தார்கள் என்று கூறுவதற்கு முன்னர், வடக்கு கிழக்கின் தேர்தல் சரித்திரத்தை புரட்டி பார்க்க வேண்டும்.

ஏற்கனவே வேறு சிலர், குறிப்பிட்டது போல், முன்னைய பல பாரளுமன்ற தேர்தல்களில், விசேடமாக யாழ்பாணம் மாவட்டத்தில், வெற்றி பெற்ற விஜய கலா மகேஸ்வரன், அங்கஜன் இராம நாதன் போன்றோர், சிங்கள கட்சிகளிலேயே வெற்றி கண்டவர்கள் என்பதை பலர் மறந்துள்ளார்கள். இதேவேளை, டக்ளஸ் தேவனந்தவின் செயற்பாடுகள் யாவும், சிங்கள பௌத்த அரசிற்கு நூறு வீதம் ஆதரவாக இருந்த வேளையிலும், பல தடவைகள் யாழ்பாணம் மாவட்டத்திலிருந்து தெரிவாகியிருந்தார்.

இந்த நிலைமையில், யாழ் மாவட்டத்தில், தே.ம.ச.யின் வெற்றிக்கும் - விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவனந்தாவின் முன்னைய வெற்றிக்குமிடையில், நாம் எந்த வேறுபாடுகளையும் காண முடியாது என்பதை யாவரும் சிந்திக்க வேண்டும்.

**சுயேச்சை, வைத்தியர்**

இவ்விடத்தில், நாம் ஓர் உண்மையை ஒத்து கொள்ள வேண்டும். 1960ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டு வரை, தமிழரசு கட்சியின் பாரளுமன்ற உறுப்பினராக, வடக்கு கிழக்கிலிருந்து டாக்டர் ஈ.எம்.பி. நாகநாதனிற்கு பின்னர், மக்களால் தெரிவு செய்யப்பட்ட வைத்தியராக, பாரளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுணா இராமநாதன் காணப்படுகிறார்.

அதேவேளை, யாழ் முன்னாள் நகர பிதா அல்பிரட் துரையப்பா, யாழ்பாண தொகுதியில் 1960ம் ஆண்டு மார்ச், யூலை மாதங்களில் நடைபெற்ற பாரளு மன்ற தேர்தல்களில், சுயேட்சை வேட்பாளராக வெற்றி பெற்ற பின்னர், வடக்கு கிழக்கிலிருந்து, தற்பொழுது வைத்தியர் அர்ச்சுணா வெற்றி பெற்றுள்ளது வர வேற்க கூடிய விடயம்.

ஆனால், வைத்தியர் அருச்சுனாவின் வெற்றியை, பல ஈழத்தமிழர்கள் சந்தேக கண்ணுடன் பார்ப்பது பற்றி, நிச்சயம் அர்ச்சுனாவும் அவரது ஆதரவாளர்கள் என்பதற்கு மேலாக, அவரது விசிறிகளும் அறிந்திருப்பார்களென நம்புகிறேன். ஆகையால், சிறிலங்கா பாரளுமன்றத்தில், தனது வைத்தியதுறை அனுபவங்களுடன், தனது முதிர்ச்சியையும் அர்ச்சுண காண்பிப்பது வரவேற்க தக்க விடயம்.

இம்முறை நடைபெற்ற பாரளுமன்ற தேர்தலில், ஒட்டுமொத்தமாக நாடு பூராகவும், 196 பாரளுமன்ற ஆசனங்களிற்கு 8,352 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள் என்பதுடன், 29 தேசியல் பட்டியலிற்கு, நூற்று கணக்கான பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது, கட்சிகளின் தேர்தல் பீதியை வெளிப்படுத்துகிறது.

மிக அண்மைகாலமாக, தமிழரசு கட்சியில் பல எழுதாத சட்டங்களை தமது வசதிக்கு ஏற்ப உண்டு பண்ணியுள்ளார்கள். முதலாவதாக முன்பு தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வி கண்ட யாரும், தமிழரசு கட்சி மூலம் தேர்தலில் போட்டியிட முடியாது எனவும், அடுத்து தேர்தலில் தோல்வியுற்ற யாரும், தேசிய பட்டியல் மூலம் பாரளுமன்றம் செல்ல முடியாதென கூறப்பட்டுள்ளது.

ஆனால் தற்பொழுது, தமிழரசு கட்சியின் தேசிய பட்டியல் நியமானத்தை பார்க்கும் பொழுது, தேர்தலில் தோல்வியுற்ற ஒருவரே தேசிய பட்டியலிற்கு தெரிவாகியுள்ளது என்பது, மீண்டும் மத்திய குழுவின் முடிவு என்ற பெயரில், ஓர் தனி மனிதனின் முடிவு வெளிப்படையாகியுள்ளது.

இதேவேளை தற்போதைய தே.ம.ச. அரசாங்கம் என்பது, கடந்த காலங்களில் நடைபெற்ற ஊழல்களின் கோவைகளை தூசி தட்டி விசாரணைகளை முன் வைக்கும் இவ்வேளையில், மாகாண சபை காலத்தில் சுகாதார அமைச்சிலிருந்து ஊழல் குற்றச்சாட்டின் பிரகாரம், அமைச்சு பதவியை இழந்த நபரை தமிழரசு கட்சி தெரிவு செய்துள்ளதனால் - வன்னி மக்கள் உட்பட, தமிழரசுக் கட்சியின் சகல குழுக்களும் தொண்டர்களும் தமது அதிர்ப்தியை காண்பித்துள்ளனர். இப்படியான பின்ணனியை கொண்ட ஒரு நபருக்கு, தமிழரசு கட்சி தமது தேசிய பட்டியலில் இடம் கொடுப்பது என்பது, "வாளில் நின்று தவம் செய்வதற்கு" சமனாகும்.

அரசு, ஊழல் விசாரணையை ஆரம்பித்து, இவ் நபர் வெளியேற்றபடும் நிலை உருவானால், திரு ஏக்கியராஜ்ஜியம், அவரின் இடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர் என, அவரின் மத்திய குழு முன்மொழியும் என்பதில் ஐயமில்லை.

> வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்டும், காணமல் ஆக்கப்பட்டவர்களின் - பெற்றோர், சகோதர சகோரிகள், உறவினார், நண்பர்கள், உங்களை நம்பி வாக்களித்த மக்களிற்கு, நீங்கள் என்ன பதில் கூறுவீர்கள்?

ஏற்கனவே இரு தடவைகள் பாரளுமன்ற உறுப்பினராக விளங்கிய ஒருவர், கடந்த தேர்தல் காலங்களில் நடைபெற்ற ஓர் செவ்வியில் கூறியது என்னவெனில், "நாம் ஒரு தடவை, ஒற்றையாட்சியை ஏற்றுவிட்டால், பின்னர் இதற்கு வெளியில் எதையும் கேட்க முடியாதாம்". அருமையான விடயம். இவர் ஒவ்வொரு தடவையும் பாரளுமன்றம் சென்று, அங்கு ஆறம் திருத்த சட்டத்தின் கீழ், தான் எதற்காக என்ன அடிப்படையில் சத்திய பிரமணம் எடுக்கிறார் என்ற அர்தமே தெரியாதவர், பாரளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றால் என்ன, தோல்வி கண்டால் என்ன!

உண்மையில் தமது மக்களிற்கு மனமார்ந்த சேவை, பணி, தொண்டு செய்ய விரும்பியவர்களிற்கு, பாரளுமன்ற உறுப்பினர் பதவி முக்கியமானது அல்ல. உதாரணத்திற்கு, இன்று உலக புகழ் பெற்ற புனித அன்னை தெரசா, தனது நாட்டை விட்டு சென்று, இந்தியாவின் கல்கத்தாவில், அவரது வாழ்நாளின் பெரும்பகுதியை, சேரிகளில் உள்ள "ஏழைகளில் ஏழ்மையானவர்களுக்கு" சேவையை ஆரம்பத்தில் அர்ப்பணித்தார். அதனை தொடர்ந்து - எச்.ஐ.வி. எய்ட்ஸ், தொழுநோய், காசநோய்


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுக்குமேல் தவறிழைக்கிறதா தமிழரசுக்கட்சி?



கந்தையா அருந்தவபாலன்



"ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு பாரிய சவால் ஒன்று தோன்றியுள்ள இன்றைய நிலையில் அவர்கள் வழமைபோல தமது கட்சி பற்றியே சிந்திக்கிறார்கள் என்பதே தமிழ் மக்களின் வேதனை. தேசிய அலையால் தமிழ் மக்கள் வீடுகளில் புகுந்த வெள்ளத்தில் தங்கள் வீடுகள் எதிர்காலத்தில் தாக்குப்பிடித்து நிற்குமா எனத் தமிழ் மக்கள் ஏங்கி நிற்கும்போது தங்கள் கட்சிவீடு உறுதியாகவே உள்ளது எனப் பெருமைப்படும் தலைவர்களை என்னவென்று சொல்வது?"

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தாம்செய்த தவறான அரசியல் செய்கைகளுக்கான மோசமான விளைச்சலை நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் அறுவடை செய்துள்ளதைக் காணமுடிகிறது. இந்த மோசமான அறுவடைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பொறுப்புக் கூறவேண்டியவர்களாக உள்ளனர் என்பதற்கப்பால் அதற்கான கூடியளவு பொறுப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஏனெனில் 2009 ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களின் பிரதான அரசியல் இயக்கமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரம் முழுமையும் அக்கட்சித் தலைவர்களின் கையிலேயே இருந்து வந்துள்ளது. எடுக்கப்பட்ட பிரதான தீர்மானங்கள் அனைத்தும் அதன் தலைவர்களது விருப்பு வெறுப்புகளின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டுள்ளன என்பதை மக்கள் அறிவர். அதனால் அக்கூட்டமைப்பின் சாதனைகளுக்குரிய பிரதான கதாநாயகர்கள் தாமே என்று எவ்வாறு மார்தட்டினார்களோ அதே போலவே தற்போது ஏற்பட்ட வேதனைகளுக்கும் பிரதான காரணகர்த்தாக்கள் தாமே என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். கடந்துவந்த பாதையில் நாம் விட்ட தவறுகளிலிருந்து பாடத்தைக் கற்று அதிலிருந்து விலகி சரியான பாதையில் பயணிப்பதே எமது இலட்சியத்தை நோக்கிய வெற்றிக்கான சரியான வழியாகும். இது அரசியல் கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் பொருந்தும். ஆனால் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் இதனை உணர்ந்துள்ளார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் மிக மோசமான பின்னடைவைச் சந்தித்திருந்தாலும் 'விழுந்தாலும் மீசையில் மண்படவேயில்லை' என்ற தோரணையில் பெருமை பேசுவதுடன் நின்றுவிடாது அக்கட்சியின் அரசியல் அணுகுமுறைகளும் மக்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு உதவும் போலத் தெரியவில்லை. மாறாக அக்கட்சித் தலைவர்கள் மாறிவரும் அரசியல் களநிலைமைகளப் புரிந்து கொள்ளாது எந்தவித தூரநோக்குமின்றி தொடர்ந்து பழைய பாதையில் சென்று தவறுக்குமேல் தவறு இழைப்பது போலவே தென்படுகிறது.

தமிழ் மக்களின் தலைமைக் கட்சியாகத் தங்களை எப்போதும் வெளிப்படுத்திவரும் தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் தேர்தல் முடிந்தவுடன் கூட்டாக ஊடக மாநாடு ஒன்றை நடத்தி தேர்தல் தொடர்பான தங்களின் நிலைப்பாடுகளை மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்க வேண்டும். குறிப்பாகத் தேர்தலில் தமக்கு மட்டுமன்றித் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் பற்றி தெளிவுபடுத்தியிருப்பதுடன் அம்மக்களுக்கு எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையை ஊட்டியிருக்க வேண்டும். குறைந்தது தமக்கு வாக்களித்தவர்களை நோக்கியாதல் இதைச் செய்திருக்க வேண்டும். தேர்தல் பின்னடைவுகளுக்கு யாரும் பொறுப்புக்கூற முன்வரவில்லை. கட்சிக்கு உண்மையில் யார் தலைமை தாங்குகிறார்கள் என்பது ஒரு கேள்விக்குறியாக இருந்தாலும் குறைந்தது அக்கட்சியின் தலைவராக தன்னை இடைக்கிடை வெளிப்படுத்துபவரான மாவை சேனாதிராசா கூட அதனைச் செய்ய முன்வரவில்லை. ஆனால் அதற்கு மாறாக சுமந்திரன் தலமையிலான அணி தனித்து ஊடகங்களுக்கு முன் தோன்றி மீண்டும் தமக்கிடையிலான பிரிவினையைக் காட்டி மேலும் மக்களை அதிருப்தி நிலைக்குத் தள்ளியதுதான் மிச்சம்.

தமிழ் மக்களின் பிரதான கட்சி என்ற வகையில் இக்கட்சியின் முக்கிய தலைவர்கள் தேர்தல் முடிந்தவுடன் இத்தேர்தல் தொடர்பான முழுமையான மதிப்பீடு ஒன்றுக்கான ஆரோக்கியமான கலந்துரையாடல் ஒன்றை முக்கியமாகச் செய்திருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக வழமையைவிட மிக மோசமான பின்னடைவு இத்தேர்தலில் ஏற்பட்டது மட்டுமன்றி அது தமிழ் மக்களின் எதிர்கால இருப்புத் தொடர்பாகப் பல்வேறு ஐயங்களைத் தோற்றுவித்துள்ள இன்றைய நிலையில் அதுதொடர்பாக இதுவரை உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. குறைந்தது தேர்தலின் பின் கூடிய கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் தேர்தல் நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கான ஒரு குழுவையேனும் நியமித்திருக்க முடியும். ஆனால் அதனைக்கூட அவர்கள் செய்ததாகச் செய்திகளில்லை. ஒரு வேளை அவர்கள் அவ்வாறு செய்யாததற்குக் காரணம் தாங்கள் சரியான பாதையில்தான் சென்று கொண்டிருப்பதாக எண்ணுவதாகவும் இருக்கக்கூடும். ஏனெனில் தேர்தலின் பின் அக்கட்சியின் முக்கிய தலைவர்கள் அவ்வாறாணதொரு நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வருகின்றனர். தேர்தலின் பின் தனது யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி அணியினருடன் ஊடகங்களுக்கு முன்தோன்றிய சுமந்திரன் தமிழ் மக்கள் தங்களுக்கே ஆணையைத் தந்திருக்கிறார்கள் என்றும் மற்றத் தமிழ்க்கட்சிகளை நிராகரித்திருக்கிறார்கள் என்றும் பெருமைப்பட்டுக் கொண்டது போல அக்கட்சியின் மூத்த துணைத் தலைவர் சிவஞானம் உட்பட அக்கட்சியின் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களும் அவ்வாறே பீற்றிக்கொண்டு இருப்பதைக் காணமுடிகிறது. தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டுமென்ற இவர்களின் மனப்பான்மை வேண்டுமானால் இவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால் இங்கு மூக்குப் போவதும் சகுனம் பிழைப்பதும் தமிழ் மக்களுக்கு என்பதை ஏனோ இவர்கள் மனங்கொள்ளவில்லை. ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு பாரிய சவால் ஒன்று தோன்றியுள்ள இன்றைய நிலையில் அவர்கள் வழமை போல தமது கட்சி பற்றியே சிந்திக்கிறார்கள் என்பதே தமிழ் மக்களின் வேதனை. தேசிய அலையால் தமிழ் மக்கள் வீடுகளில் புகுந்த வெள்ளத்தில் தங்கள் வீடுகள் எதிர்காலத்தில் தாக்குப்பிடித்து நிற்குமா எனத் தமிழ் மக்கள் ஏங்கி நிற்கும்போது தங்கள் கட்சிவீடு உறுதியாகவே உள்ளது எனப் பெருமைப்படும் தலைவர்களை என்னவென்று சொல்வது?

தேர்தலின் பின் கூடிய அக்கட்சியின் அரசியல்குழுக் கூட்டத்தில் தேர்தல் தொடர்பாக ஆராயத் தவறிவிட்டாலும் அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள்கூட தமிழ்மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் அமையவில்லை. இதில் மிகமோசமான விடயம் என்னவெனில் இருப்பது போலவும் இல்லாதிருப்பது போலவும் தோன்றும் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா தள்ளாத வயதிலும் தனக்குத் தேசியப்பட்டியலைத் தரும்படி நாண்டு கொண்டு நின்றதாகும். எக்குடி( தமிழினம்) எக்கேடுபட்டுப்போனாலும் எனக்கு பதவிதான் முக்கியம் என்று எண்ணங்கொண்ட மாவை தான்தான் தமிழரசுக்கட்சியின் இன்றைய சீரழிவு நிலைக்குப் பிரதான காரணம் என்பதை இன்னும் உணராதது போலவே தமிழரசுக்கட்சியின் பல மூத்த தலைவர்களும் இன்றும் இருப்பது தமிழ் மக்களின் சாபக்கேடன்றி வேறில்லை.

அரசியல்குழு தேசியப் பட்டியல் ஆசனத்தை மாவைக்கு வழங்காதது வரவேற்கக்கூடியதுதான். ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அது பொருத்தமான ஒருவருக்கு வழங்கப்பட்டதா என்றால் அதுவுமில்லை. அதிலும் அக்கட்சியின் பிளவு பிரதிபலிப்பதாகவே தெரிகிறது. உண்மையில் அவ்வாசனத்தை பெண்ணொருவருக்கு வழங்கியிருக்கவேண்டும். வடக்கு கிழக்கில் தமிழ்ப் பெண்பிரதிநிதிகள் ஒருவரேனும் தெரிவு செய்யப்படாத ஒருநிலையில் பெண் வாக்காளரைப் பிரதிபலிக்கும் வகையில் அத்தெரிவு அமைவதே பொருத்தமானதாக இருந்திருக்கும். இதேவேளை மலைநாட்டில் இருவர் மாத்தறையில் ஒருவரென மூன்று தமிழ்ப் பெண்களுடன் பத்தொன்பது பெண்கள் தேசிய மக்கள் சக்தியில் தெரிவு செய்யப்பட்டிருந்தும் மேலும் ஒருவருக்கு தேசியப் பட்டியலூடாக வழங்கி பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை இருபதாக அக்கட்சி உயர்த்தியுள்ளது. இந்த மாற்றத்தைக்ககூடப் பார்க்க முடியாத குருடர்களாகிவிட்டனர் தமிழரசுக் கட்சியின் அரசியற்குழுவினர். இன்றும் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்று பெருமை கொள்வோர் ஏனோ பெண்களைச் சிறுமைப் படுத்திவிட்டனர். உண்மையில் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் தங்களின் தெரிவை உறுதிப்படுத்துவதற்கான வாக்குப் பொறுக்கிகளாகவே தொடர்ந்து பெண்களைக் கையாண்டு வருகின்றனர். சிவனே என்று தன்பாட்டிலிருந்த சசிகலா ரவிராஜ்ஜை ஓய்வு காலத்துக்கு முன்னரே ஓய்வை அறிவிக்கச் செய்து வலிய இழுத்து வந்து சென்ற தேர்தலில் இறக்கி தமது காரியம் முடித்த பின் இம்முறை அவர் கறிவேப்பிலையாகத் தூக்கியெறிப்பட்டது இதற்கு நல்ல உதாரணம். 2015 இல் தனக்கு விருப்பமில்லாதவர்க்கு தேசியப் பட்டியல் ஆசனம் செல்வதைத் தடுப்பதற்காக பெண்பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ஒற்றைக்காலில் நின்ற சுமந்திரன் இப்போது நடந்த அரசியல் குழுக்கூட்டத்தில் அக்காலைத் தூக்க மறந்ததேன்?

பல்வேறு குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் உள்ளபோதும் கட்சியில் சுமந்திரனின் விசுவாசியான சத்தியலிங்கத்துக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டதன் பிரதான நோக்கம் பாராளுமன்ற உறுப்பினராக தற்போது தான் இல்லாவிட்டாலும் எதிர்காலத் தேவைகளுக்காக கட்சியின் கட்டுப்பாடு தன்வசம் எப்போதும் இருக்க வேண்டும் என்ற சுமந்திரனின் திட்டத்தின் ஓர அங்கமாகும் என்பதை எதிர்காலம் உணர்த்தும். மேலும் அது அக்கட்சியைப் பலவீனமாக்குவதற்கான இன்னொரு கால்கோள். மாகாண அமைச்சராக சத்தியலிங்கம் இருந்தபோது அவர் தொடர்பாக பல்வேறு குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டதுடன் அவருக்கான தனிப்பட்ட பணிக்குழு நியமனங்கள் முழுவதையும் தனது நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கியிருந்தார் என்ற விமர்சனங்களும் அவர்மீது உண்டு. விசாரணைக்குழு அவரைக் குற்றமற்றவராக அறிவித்துள்ளது என்றாலும் குற்றஞ்சாட்டியவர்கள், விசாரணைக்குழுவை நியமித்தவர்கள் யாரும் புறத்தவர்கள் அல்ல. எல்லோரும் ஒரே அணியினர் தான். அரச துறைகளில் இடம்பெறும் விசாரணைகளும் தீர்ப்புகளும் எப்படியானவை என்பது எல்லோரும் அறிந்ததே. ஹெல்பிங் அம்பாந்தோட்டை ஊழலிலிருந்து மகிந்தவையும், மத்தியவங்கி மோசடியிலிருந்து ரவி கரணாநாயகவையும், ராஜபக்ஷ நினைவிட முறைகேட்டிலிருந்து கோதாபயவையும் நீதிமன்றங்களே குற்றமற்றவர்களாக விடுவிக்கும்போது இது ஆச்சரியப்படத்தக்கதொன்றல்ல.

அரசியல் குழுக்கூட்டத்தில் முக்கியமாகக் கருத்தில் எடுக்கவேண்டிய விடயங்களான தேர்தல் விளைவுகளை மதிப்பிடுவதற்கான முன்னெடுப்பில்லை, பெண்பிரதிநிதித்துவம் தொடர்பாகச்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா - உக்ரேன் போர் ஒரே நாளில் நிறுத்தப்படும் டிரம்ப் உறுதி!

அடுத்த அமெரிக்க அதிபராகத் தேர்வாகியுள்ள டொனால்ட் டிரம்ப் உக்ரேனில் "ஒரே நாளில்" போர் நிறுத்தப்படும் என உறுதியளித்துள்ளார். அவர் அதை எப்படி செய்யப் போகிறார் என்று விவரிக்கவில்லை.

அவரது தேர்தல் வெற்றிக்குப் பிறகு, அவர் அதை எப்படி செய்யப் போகிறார் என்பது குறித்துப் பல விதமான கருத்துகள் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன. ரஷ்யா - உக்ரேன் இடையி லான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் திட்டம் தீட்டப்பட்டு வருவதாகப் பல நிபுணர்கள் நம்புகின்றனர்.

டொனால்ட் டிரம்ப் பதவியேற்றவுடன், இரு நாடுகளையும் பேச்சுவார்த்தைக்கு வரவழைப்பார் என்று உக்ரேன் எதிர்பார்க்கிறது. உக்ரேன் அதிபர் செலன்ஸ்கி "ராஜ்ஜீய வழிமுறைகள்" மூலம் அடுத்த ஆண்டுக்குள் போரை நிறுத்துவதற்கான தனது எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.



இப்படியொரு பேச்சுவார்த்தை இந்த நேரத்தில் நடைபெற்றால், அதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?

போரில் ரஷ்யா முன்னோக்கிச் சென்று கொண்டிருக்க, போர்க்களம் அதற்குச் சாதகமாக அமைந்து வருகிறது.

கிழக்கு டான்பாஸ் பகுதியில் ரஷ்ய படைகள் முன்னேறி வருகின்றன. அதேநேரம் வட கிழக்கில் கார்கிவ் பகுதியில் உள்ள குப்யான்ஸ்க் நகரை நோக்கி முன்னேறுகின்றனர், தென் கிழக்கில் உள்ள பெரிய நகரமான ஸபோரிஷியா நகரை நோக்கியும் ரஷ்ய படைகள் முன்னேறி வருகின்றன.

இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில், உக்ரேன் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கூடுதலாக 500 சதுர கி.மீ இடத்தைக் கைப்பற்றியுள்ளது ரஷ்யா. 2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் இதுவும் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

உக்ரேனின் எல்லைக்கு உட்பட்டவை என்று சர்வதேச அங்கீகாரம் பெற்ற பகுதிகளில் 27 வீதம் ரஷ்ய ஆக்கிரமிப்பில் உள்ளன என்று அதிபர் செலன்ஸ்கி கூறுகிறார். ரஷ்யா 2014 இல், கைப்பற்றிய க்ரைமியா மற்றும் நாட்டின் கிழக் குப் பகுதிகள் சிலவற்றையும் சேர்த்து அவர் குறிப்பிடுகிறார்.

தனது நாட்டின் கர்ஸ்க் பகுதியில், பெரிய அளவிலான பதில் தாக்குதலை ரஷ்யா திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது. இதில் வட கொரிய வீரர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பகுதியை உக்ரேன் கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்திய திடீர் எல்லை - தாண்டிய தாக்குதலில் கைப்பற்றியது. பேச்சுவார்த்தைகளின்போது தனது தரப்பின் சார்பில் பேச உதவலாம் என்பதற்காக, உக்ரேன் இப்போதும் இந்தப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. ●

---




# வியுக்தியார் பதில்கள்

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** 10ஆவது புதிய பாராளுமன்றத்தின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய அக்கிராசன உரையின்போது தமிழர்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு விடயங்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை என்றும், 13ஆவது திருத்த அமுலாக்கல் குறித்து ஜனாதிபதி எதுவுமே தெரிவிக்காமை தமக்குப் பெரும் ஏமாற்றம் அளிக்கிறது என்றும், இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்றக்குழு தெரியப்படுத்தியுள்ளதே. இந்தியா என்ன செய்யும் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இந்தியா எதையாவது செய்யும் என்று நீங்கள் நினைப்பதால்தான் இப்படியொரு கேள்வியே எழுந்திருக்கின்றது என்று நினைக்கின்றேன். ஜனாதிபதி தனது அக்கிராசன உரையில்தான் ஒரு விடயத்தை தெளிவாக சொல்லிவிட்டாரே. இனி இந்த நாட்டில் இனவாதத்திற்கு இடமில்லை என்று. இனி இப்படி தமிழர்கள் பேசுவதும் இனவாதம் என்றுதான் சொல்லப் போகின்றார்கள். அதுசரி நமது தமிழ் அரசு கட்சி பதின்மூன்றாவது திருத்தம் பற்றி ஜனாதிபதி எதுவும் கூறாதது தமக்கு பெரும் ஏமாற்றம் என்று குறிப்பிட்டுள்ளதே. அப்படியெனில் அது தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாகிவிடும் என்று நம்புகின்றதா என்றும் அல்லவா சொல்லியிருக்க வேண்டும். பதின்மூன்றைப்பற்றி பேசினால்தான் இந்தியா தாங்கள் சொல்வதை காதுகொடுத்து கேட்கும் என்பதற்காக இப்படி பதின்மூன்று பற்றி பேசினால் மட்டும் போதாதே. அதுபற்றிய தமது கருத்தையும் அல்லவா தெளிவாக சொல்ல வேண்டும். இந்தியா இனி செய்வதற்கு என்னதான் இருக்கின்றது?.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் முஸ்லிம்கள் எவரும் இல்லை என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ள அமைச்சர் பிமல் ரத்நாயகக், தமது அரசாங்கம் இலங்கையர்களை உள்ளடக்கிய ஒரு அரசாங்கம். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற மத ரீதியான அடையாளங்களை கொண்டிருக்கவில்லை என தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** நல்ல விசயம்தான். ஆனால் இன்னமும் இலங்கை பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் ஒருவரின் இனம் என்பதில் சிங்களவர், இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள் என்றுதானே குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிகம் ஏன் நமது அரசியலமைப்பு சட்டத்திலேயே பௌத்தத்திற்கு முன்னுரிமை என்றுதானே குறிப்பிடப்பட்டுள்ளது. அதுசரி தமிழர்கள் என்பதும் மத அடையாளம் என்று அவர் நினைத்திருக்கிறார் போலும். இலங்கையர்களை உள்ளடக்கிய அரசாங்கம் இருப்பது நல்லதுதான். ஆனால் அதற்கு முன்னதாக ஒவ்வொருவரையும் தாங்கள் இலங்கையர்கள் என்று நினைக்கவைக்க அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும்.

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய ஊடகப் பேச்சாளராக, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவால் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் பாராளுமன்ற குழுவால் அந்தக் குழுவின் பேச்சாளராகத்தான் தெரிவுசெய்யப்பட்டார் என்று வேறு ஒரு செய்தி தெரிவித்ததே. அப்படியெனில் இனி தமிழ் அரசுக் கட்சிக்கு இரண்டு பேச்சாளர்கள் இருப்பார்களோ?

**வியுக்தியார்:** ஏற்கனவே கட்சியில் இரண்டு குழுக்கள் தான் இயங்குகின்றது என்பது ஒன்றும் இரகசியமானது இல்லைத்தான். ஆனால் பாராளுமன்றக் குழுவும் அப்படி இரண்டாக இயங்கவில்லை என்பதையாவது நினைத்து சந்தோசப்படுங்கள். பாராளுமன்றக்குழுவிலாவது ஒருவரை ஏகமானதாக நியமிக்கமுடிந்தது என்று கட்சிக்காரர்கள் இப்போதுதான் நின்மதிப்பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்க, இதற்கு பதிலளித்து மீண்டும் அவர்களை குழப்ப வேண்டாம் என்று நினைக்கின்றேன்.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்குரிய அழுத்தங்களையும் வேறு சர்வதேச விசாரணையை நடத்தக்கூடிய அரங்குகளுக்கு இலங்கையை கொண்டு செல்வதற்குரிய எங்களுடைய பயணம் இன்னும் தீவிரம் அடையும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** யுத்தம் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அதாவது, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்குரிய அவரது பயணம் தொடங்கி பதினைந்து வருடங்கள் முடிந்துவிட்டன. ஆனால் அந்தப் பயணத்தில் மனுசன் இதுவரை எவ்வளவு தூரம் பயணித்திருக்கிறார் என்பதையுமல்லவா சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால், இன்னும் எவ்வளவு தூரத்திற்கு அவர் பயணம் செய்யவேண்டியிருக்கின்றது என்பதையாவது நாம் அறிந்திருக்கலாம். முள்ளிவாய்க்காலில் நின்றுகொண்டு இப்படிச் சொன்ன மனுசன், அதாவது தனது பயணத்தை தொடர்வதற்கு சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட மறுநாளே, இலங்கை பாராளுமன்றம் வந்து இலங்கையின் ஒற்றையாட்சிக்கு விசுவாசமாக இருப்பேன் என்றும் அல்லவா சத்தியப்பிரமாணம் எடுத்திருக்கிறார். நகைச்சுவை நடிகர் வடிவேலு ஒரு படத்தில் சொல்வதுபோல, எவ்வளவு அடிச்சாலும் அவர்களுக்கு நோவதில்லைப்போலும். மக்கள் இந்தத் தேர்தலில் தெளிவான செய்தியைச் சொன்னபின்னரும் அவர்கள் கண்டுகொள்வதாகவும் தெரியவில்லையே.

---

**எம். அகிலேஸ்வரன், சித்தன்கேணி.**

**கேள்வி:** இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் தேர்தல் முடிவடைந்ததும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்செய்து பல்வேறு உதவித்திட்டங்களை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். திடீரென்று தமிழ் மக்கள் மீது அவர்களுக்கு இப்படியொரு கரிசனை ஏன் ஏற்பட்டது என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இதில் நினைப்பதற்கு என்ன இருக்கின்றது?. இதுவரை காலமும் வடக்குக்கு வருகின்றபோது, ஏதோ அந்நிய மண்ணுக்கு வருவதுபோல உணர்ந்தவர்கள் இப்போது அப்படி உணரவில்லை என்பதை அவர்களே வெளிக்காட்டிவிட்டுத்தானே போயிருக்கிறார்கள். தமிழ் மக்கள் நடந்துமுடிந்த தேர்தலில், தமது ஆட்களுக்கு வாக்களித்ததைப் பாராட்டிய அவர்கள், அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடவே தாங்கள் வந்ததாகவும் சொல்லிவிட்டுத்தானே போயிருக்கிறார்கள். இனி என்ன அவர்கள் வடக்கு மண்ணையும் தங்கள் மண் போல நினைத்துக்கொண்டு அடிக்கடி வந்துபோவார்கள் என்று நம்பலாம்.

---

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் நீங்கள் எதை நினைத்து கவலைப்பட்டீர்கள்? அதேபோல எதை நினைத்தாவது சந்தோசப்பட்டீர்களா?

**வியுக்தியார்:** வடக்கு தமிழர்கள் குறிப்பாக யாழ்ப்பாண தமிழர்கள் தங்களைத் தாங்களே பெரிய அறிவு ஜீவிகளாகவும், தங்களை விட்டால் உலகத்திலேயே அறிவாளிகள் இல்லை என்றும் பெருமைபேசுபவர்கள் என்பது உங்களுக்கும் தெரிந்ததுதான். அத்தகையவர்கள் தான் 'அவருக்கும்' வாக்களித்து எம்.பி. ஆக்கியிருக்கிறார்கள் என்று எண்ணியபோது அது கவலையாக இருந்தாலும், இப்போதாவது யாழப்பாணத்தார் தமது திறமையை பறைசாற்றியிருக்கிறார்களே என்று சந்தோசமும் ஒரே தடவையிலேயே ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்தில் சர்ச்சைக்குரிய மசோதா எதிர்ப்பு: மாவோரி பழங்குடி எம்.பியின் ஆவேச முழக்கம்

ஐங்கரன் விக்கினேஸ்வரா



நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் வைதாங்கி உடன்படிக்கையின் சில மாற்றங்களை கொண்ட வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்நிகழ்வு நாடு முழுவதும் பலத்த அதிர்வுக் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வைதாங்கி ஒப்பந்தம் - முன்னதாக, 1840-ல் பிரிட்டன் அரசு பிரதிநிதிகளுக்கும், நியூசிலாந்தின் வடக்குத் தீவில் இருக்கும் பூர்வக்குடிகளாக அறியப்படும் மாவோரி தலைவர்களுக்கும் இடையே 'வைதாங்கி ஒப்பந்தம்' (Treaty of Waitangi) மேற்கொள்ளப்பட்டது.

இதில் மாவோரி பூர்வக்குடிகளுக்கு சில சலுகைகளும், உரிமைகளையும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் மாற்றம் செய்ய நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் அண்மையில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. இந்த மசோதாவுக்கு டி பாடி மவோரி கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

முதலில் இளம் எம்.பி. ஹானா பழங்குடி பாடலுடன் மசோதா நகலை கிழித்தெறிந்து அவையின் நடுவே வந்து போராட்ட முழக்கம் எழுப்ப அவருடன் பிற மவோரி எம்.பி.க்களும் இணைந்து கொண்டனர்.

**வைதாங்கி புதிய மசோதாவுக்கு எதிர்ப்பு**

அவர்களின் பழங்குடியினப் பாடலும், அதற்கேற்ற ஆவேச நடனமும் நியூசிலாந்து நாடாளுமன்றத்தை அதிரவைத்தது. அவர்களின் உரிமைப் பாடலை செய்வதறியாது கவனித்துவந்த சபாநாயகர் பின்னர் மவோரி எம்.பி.க்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிட்டார். அத்துடன் சர்ச்சைக்குரிய மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, சட்ட நகலை பாராளுமன்றத்தில் கிழித்த நிகழ்வு உலக அரங்கில் கவனம் பெற்றுள்ளது.

கடந்த வருட இறுதியில் ஹனா-ரவ்ஹிதி கரேரிகி மைபி-கிளார்க் எனும் 22 வயதான இளம் எம்பி, தனது கன்னி உரையின் போதே மாவோரி மொழியில் பேசியது நியூசிலாந்து மட்டுமல்லாது உலக அளவில் கவனத்தை ஈர்த்தது.

நியூசிலாந்து அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த வைதாங்கி உடன்படிக்கையின் சில மாற்றங்களை கொண்டு வருவதற்காக நியூசிலாந்து ஆளும் கூட்டணியில் யுஊவு கட்சி முன்மொழிவை கொண்டு வந்து வாக்கெடுப்பிற்கு அழைப்பு விடுத்தது.

அதன் படி நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் வைதாங்கி உடன்படிக்கையின் சில மாற்றங்களை கொண்ட வாக்கெடுப்பு நடைபெற்றது. அப்போது, நியூசிலாந்து நாட்டின் பூர்வ குடிகளான மாவோரி பழங்குடியினத்தைச் சேர்ந்த இளம் எம்பி, ஹக்கா எனப்படும் மாவோரிகளின் நடனம் ஆடி எதிர்ப்பு தெரிவித்தது. இது நாடு முழுவதும் பலத்த அதிர்வுக் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் உரிமைப் பாடலை செய்வதறியாது கவனித்துவந்த சபாநாயகர் பின்னர் மவோரி எம்.பி.க்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிட்டார்.

**யார் இந்த மாவோரிகள்?**

மாவோரி பூர்விகத்தை கொண்டவர்கள் பாலினேசியகள் பசிபிக் கடலெங்கும் பரவினார்கள். அவர்களில் ஒரு பிரிவினர் கிபி 1250ம் ஆண்டு நியூசிலாந்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

கிபி 1769ம் ஆண்டு பிரிட்டிஷ் கப்பல் கேப்டன் ஜேம்ஸ் குக் நியூசிலாந்துக்கு வந்து சேர்ந்தார். அடுத்த நூறாண்டுகளில் மெதுவாக வெள்ளையர் குடியேற்றம் அதிகரித்தது. 1845 முதல் 1872 வரை சில போர்கள் நடந்தன. பிரிட்டனுடன் சமாதான ஒப்பந்தம் போட்டுக் கொண்டு நியூசிலாந்து அரசில் குடியுரிமை, மற்றும் மாவோரிகளுக்கு சில தனியுரிமைகளை பெற்றார்கள்.

மாவோரிகளுக்கு நில உரிமை உண்டு என்றாலும், பின்னாளில் அந்த நிலங்களை அரசே வாங்கிக்கொன்டு விட்டது. மாவோரிகளிடம் அனுமதி கேட்காமல் அவர்களது பாரம்பரிய ஆறுகள், குளங்கள், காடுகள், ஏரிகள் ஆகியவற்றில் கட்டுமானம் செய்ய முடியாது. அவர்களுக்கு ஒதுக்கபடும் எம்பி சீட்டுக்களும் உண்டு. மாவோரி மொழி அரசு மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அவர்களது சிவில் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள தனி நீதிமன்றங்கள் உண்டு. மக்கள் தொகையில் 17% மாவோரிகள் என்றாலும், அவர்களில் பலர் கலப்பு மணம், நகரமயமாக்கல் என நியூசி மக்களுடன் ஒன்றாக கலந்துவிட்டார்கள். சிலர் இன்னும் மாவோரி எனும் அடையாளத்துடன் பூர்வகுடிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

**உலகமறிந்த முதல் நாடாளுமன்ற உரை :**

நியூசிலாந்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த 54-வது நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தேசிய கட்சியினர் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தனர். அப்போது டி பாடி மவோரி கட்சியைச் சேர்ந்த 6 பேர் எம்.பி.களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களில் ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க் ஒருவர். 21 வயதேயான இவர் கடந்த 1853-லிருந்து நியூசிலாந்து வரலாற்றில் மிக இளம் வயதில் எம்.பி. ஆனவர் என்ற பெருமையை பெற்றவராவார்.

ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க்கின் முதல் நாடாளுமன்ற உரை அவரை உலகம் முழுவதும் கொண்டு சேர்த்தது. தனது பேச்சினுடே மவோரி இனத்தின் போர் பாடலைப் பாடி நாடாளுமன்றை அதிர வைத்தார். ●

# நெதன்யாகுவுக்கு எதிராக பிடியாணை: இஸ்ரேலின் முயற்சிகளுக்கு இது பாதிப்பா?



இஸ்ரேலின் தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் யோவ் கேலண்ட் ஆகியோருக்கு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐசிசி) பிடியாணை பிறப்பித்துள்ளது. இந்த அறிவிப்பு, பல முக்கிய இஸ்ரேலிய தலைவர்களின் கோபத்தைத் தூண்டியுள்ளது.

அதேசமயம், ஹமாஸ், பாலத்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புகள் மற்றும் காஸாவின் பொதுமக்கள் இந்த அறிவிப்பை வரவேற்றுள்ளனர்.

"நீதி மற்றும் மனிதநேயத்துக்கு ஓர் இருண்ட நாள். ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்திற்குப் பதிலாக இந்த முடிவு, பயங்கரவாதம் மற்றும் தீமையின் பக்கம் சென்றுள்ளது" என்று இந்த அறிவிப்பு குறித்து இஸ்ரேலிய அதிபர் ஐசக் ஹெர்சாக் குறிப்பிட்டார்.

இதனை "ஒரு யூத விரோத முடிவு" என்று அழைத்துள்ளது, இஸ்ரேல் பிரதமர் அலுவலகம். "இஸ்ரேல் இந்த தவறான மற்றும் அபத்தமான குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக நிராகரிக்கிறது" என்றும் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், "ஐ.சி.சி ஒருதலைபட்சமாக செயல்படுகிறது. இது ஒரு பாரபட்சமான அரசியல் அமைப்பு" என்றும் ஐ.சி.சி மீது இஸ்ரேல் குற்றம்சாட்டியது.

"இஸ்லாமிய ஆதரவாளர்கள் வசப்பட்ட ஒரு அரசியல் அமைப்பின் வெட்கக்கேடான முடிவு இது" என்று இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் குழுவின் தலைவர் யூலி எடெல்ஸ்டெய்ன் கூறினார். சட்டபூர்வமான தன்மையை ஐசிசி இழந்து விட்ட தாக இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் கூறினார்.

தனது சொந்த இராணுவத் தளபதி முகமது டெய்ஃபுக்கு பிடியாணை பிறப்பித்தது குறித்து கருத்து தெரிவிக்காமல், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கைது குறித்தான முடிவை ஹமாஸ் வரவேற்றுள்ளது.

"உலக நாட்டினரிடம் போர் குற்றவாளிகளான சியோனிச நெதன்யாகு மற்றும் கேலண்டை நீதிமன்ற கூண்டில் ஏற்ற ஒத்துழைக்க வேண்டும் என்றும், காஸா பகுதியில் அப்பாவி மக்களுக்கு எதிராக நடைபெறும் இனப்படுகொலைக் குற்றங்களை தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்," என்று தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

காஸாவில் பாலத்தீன பொதுமக்களும் இந்த அறிவிப்பை வரவேற்றுள்ளனர்.

"நாங்கள் பயமுறுத்தப்பட்டுள்ளோம், பட்டினியால் வாடினோம், எங்கள் வீடுகள் அழிக்கப்பட்டுவிட்டன, எங்கள் குழந்தைகள், மகன்கள் மற்றும் அன்புக்குரியவர்களை இழந்துள்ளோம். இந்த முடிவை நாங்கள் வரவேற்கிறோம், நிச்சயமாக, ஐசிசியின் அறிவிப்பு செயல்படுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்" என கூறுகிறார் முஹம்மது அலி. அவர், காஸா நகரத்திலிருந்து இடம் பெயர்ந்து தற்போது டெய்ர் அல்-பாலாஹ்வின் மத்தியப் பகுதியில் வசித்து வரும் 40 வயது மதிக்கத்தக்க நபர்.

"என் சகோதரி வஃபா உட்பட பல்லாயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்கும் நீதி" என்று முனிரா அல்-ஷாமி ஐசிசியின் முடிவு குறித்து கூறுகிறார். கடந்த மாதம் இஸ்ரேலிய படைகளால் அவரது சகோதரி கொல்லப்பட்டார். ஆனால், சில இஸ்ரேலியர்கள், தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான இஸ்ரேலின் உரிமைக்கு எதிராக இந்த கைது அறிவிப்பு உள்ளது என்று கூறுகின்றனர்.

"ஆனால் இது ஒன்றும் எனக்கு ஆச்சர்யமளிக்கவில்லை," என்று கூறும் ரோன் அகெர்மன், ஐ.சி.சி. முழுக்க முழுக்க இஸ்ரேலிய எதிர்ப்புடன் செயல்படுகிறது என்றும், இஸ்ரேலில் உண்மையில் என்ன நடக்கிறது ஐ.சி.சி. பார்க்க தவறிவிட்டது என்றும் கூறுகிறார்.

ஜெருசலேமில் உள்ள ஹெலன் கரிவ் இது பற்றி பேசும் போது, "நான் முதல் முறையாக இதை கேட்கும் போது, பிரதமரையும் அவரின் முதன்மை அதிகாரியையும் கைது செய்யும் எண்ணம் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது என்று தான் தோன்றியது. நாங்கள் வாழ்வதற்காக சண்டையிடுகிறோம்," என்று கூறினார்.

**இந்த கைது பிடியாணை என்ன விளைவை ஏற்படுத்தும்?**

அமெரிக்கா, ரஷ்யா, சீனா மற்றும் இஸ்ரேல் தவிர்த்து, பிரிட்டன் உட்பட மொத்தம் 124 நாடுகள் ஐசிசியில் உறுப்பு நாடுகளாக கையெழுத்திட்டுள்ளன.

எனவே, சட்ட ரீதியாக, நெதன்யாகு அல்லது கேலண்ட் ஐசிசி கையெழுத்திட்ட நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டால் அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஆனால், அந்த நபர் எப்போதாவது நெதர்லாந்தின் ஹேக்கிற்கு விசாரணைக்காக அழைத்து வரப்படுவாரா என்பது குறித்து சர்வதேச வழக்கறிஞர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

நெதன்யாகு கடைசியாக கடந்த ஜூலை மாதம், இஸ்ரேலுக்கு வெளியே, அமெரிக்காவுக்கு பயணம் செய்தார். ஐசிசியில் அமெரிக்கா இன்னும் கையெழுத்திடாததால் அங்கு தண்டனையின்றி அவர் செல்லலாம்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம், அவர் பிரிட்டன் உட்பட பல நாடுகளுக்குச் சென்றார். அவற்றில் பல நாடுகள் ஐசிசியில் கையெழுத்திட்டவை.

இந்த நாடுகளுக்கு மீண்டும் செல்வதன் மூலம் அவர் கைதுக்கு ஆளாக நேரிடும் என்பதால், அவர் அங்கு செல்ல மாட்டார் என நம்பப்படுகின்றது. மேலும் அந்த நாடுகளும் அப்படி ஒரு நிலையை விரும்பாது.

இப்ராஹிம் அல்-மஸ்ரி என்று அழைக்கப்படும் முகமது டெய்ஃப் மீதான ஐசிசி பிடியாணை குறித்து ஹமாஸ் சிறிதும் அஞ்சவில்லை. இந்த ஆண்டின் தொடக்கத்தில் அவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் நம்புகிறது, இருப்பினும் இது ஹமாஸ் தரப்பால் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஐசிசி முதலில் வழக்குத் தொடர திட்டமிட்டிருந்த மற்ற இரண்டு ஹமாஸ் தலைவர்களான யாஹ்யா சின்வார் மற்றும் இஸ்மாயில் ஹனியே ஆகிய இருவரும் இறந்துவிட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்ல மற்றும் தீய சக்திகளுக்கு இடையிலான சண்டை இது என்று காஸாவில் தனது ராணுவ பிரசாரத்தை முன்வைக்க இஸ்ரேல் எடுத்து வந்த முயற்சிகளுக்கு, வியாழன் அன்று வெளியாகியுள்ள ஐசிசியின் அறிவிப்பு 'ஒரு பெரிய அடியாகும்' என்பதில் சந்தேகம் இல்லை.

கடந்த ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதி ஹமாஸ் செய்த அட்டூழியங்களை உலகம் ஏற்கனவே மறந்து விட்டதா அல்லது கவனிக்காமல் விட்டதா என்று இஸ்ரேல் சார்பில் கேட்கிறார்கள்.

இஸ்ரேலிய போர்க்குற்றங்கள் குறித்த தங்களது குற்றச்சாட்டுகள் இப்போது ஒரு சர்வதேச அமைப்பால் எதிரொலிக்கப்பட்டு, நியாயம் கிடைத்துள்ளதாக பாலத்தீனர்களும், காஸா மக்களும் நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொஹானின் மனைவிக்கு விளக்கமறியல்

கொழும்பு, நவ. 24

சட்டவிரோதமான முறையில் சொகுசு கார் ஒன்றைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதான முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவிக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவரை டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நுகேகொட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மிரிஹான பகுதியிலுள்ள லொஹான் ரத்வத்தவின் மனைவியின் வீட்டிலிருந்தே இலக்கத் தகடு இல்லாத, பதிவு செய்யப்படாத சொகுசு வாகனம் மீட்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் லொஹான் ரத்வத்தவின் மனைவி கடந்த நவம்பர் 4 ஆம் திகதி நுகேகொடை நீதிவான் ருவினி ஜெயவர்த்தன முன்னிலையில் தனது சட்டத்தரணி ஊடாக முன்னிலையான நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பாராளுமன்றத்....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றால் இறப்பவர்களுக்கு சேவை செய்தார். ஆகையால் மக்களிற்கு சேவை மனம் கொண்ட யாரும், பாரளுமன்றம் செல்ல வேண்டும் என்பது கட்டயாமானது அல்ல.

யாழ் மாவட்டத்தில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தோல்வியை தளுவிய முன்னுற்று தொன்னுறு (390) நபரும், அன்னை தெரசா போன்று மக்களிற்கு சேவை செய்வார்களேயானால், யாழ் மாவாட்டத்தில் ஊனமுற்ற போராளிகள் போன்றோரும், வறுமை கோட்டின் கீழ் வாழும் யாரும், சிங்கள பௌத்த அரசை நம்பி வாழ வேண்டிய அவசியமில்லை.

கடந்த பாரளுமன்ற தேர்தலில், தே.ம.ச. தனித்து நின்று போட்டிட்டு 159 ஆசனங்களை பெற்றுள்ளார்கள் என்பதை பாரிய வெற்றியாக கூறுபவர்கள், 1977ம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற பாரளுமன்ற தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி தனித்து நின்று, அன்று 168 அங்கத்துவத்துவம் கொண்ட பாரளுமன்றத்தில், 140 பாரளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றார்கள் என்பதை பலர் அறிந்திருக்கவில்லை போலும்.

சிறிலங்காவின் ஆட்சியாளர்கள், இன பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு, மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாது ஒன்றும் செய்ய முடியாது என கூறுவது வழமை. ஆனால் முன்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற சிங்கள பௌத்த அரசுகள், தமிழ் மக்களின், நிரந்தர அரசியல் தீர்விற்கு, எந்த முன்னெடுப்பும் செய்யாது, ஆசை வார்த்தைகளுடன் காலம் கடத்தினார்கள் என்பதே உண்மை.

இதே இடத்தில், இரு முக்கிய கேள்விகளை தே.ம.ச.யிடம் முன் வைக்க விரும்புகிறேன். முதலாவதாக, உங்கள் கட்சி அரசை பொறுத்த வரையில், போர் குற்றத்தில் பங்கு கொண்ட அல்லது ஈடுபட்ட படையினரை தண்டிக்க மாட்டோம் என்பது உங்களது நிலைபாடு என்பதை உலகம் அறியும்.

அப்படியானால், வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்டும், காணமல் ஆக்கப்பட்டவர்களின் - பெற்றோர், சகோதர சகோரிகள், உறவினார், நண்பர்கள், உங்களை நம்பி வாக்களித்த மக்களிற்கு, நீங்கள் என்ன பதில் கூறுவீர்கள்? "நாங்களும் எமது புரட்சி காலத்தில், இப்படியாக பலரை இழந்தவர்கள், ஆகையால் நீங்களும் நாங்களும் சமனாக பிரிவினை காட்டாது யாவற்ரையும் மறந்து வாழ்வோம் என்பீர்களா"? அல்லது அவர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிற்கு நீதி காண்பீர்களா?.

# வடக்கு, கிழக்கு தமிழ்மக்கள்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தம் தொடர்பில் தோன்றிய சர்ச்சை களின்போது தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்திய நிலைப்பாடுகள் இதற்கு பிந்திய சான்றுகளாகும்.

முன்னைய ஜனாதிபதிகளில் எந்த ஒருவருக்குமே வழங்கியிராத பிரமாண்டமான ஆணையை திசாநாயக்கவுக்கு மக்கள் வழங்கியிருக்கிறார்கள். சட்டத்தில் திருத்தங்களைச் செய்தோ அல்லது புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்தோ இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்வுகளை காண்பதற்கு எந்த தடையும் அவருக்கும் அரசாங்கத்துக்கும் கிடையாது. அரசியல் துணிவாற்றில் மாத்திரமே அவசியமாகிறது.

பெரும்பாலான தமிழ்க்கட்சிகளை நிராகரித்து தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருக்கும் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி ஒரு தெளிவான செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். அதேவேளை வரலாற்றில் முதற்தடவையாக தேசிய கட்சியொன்றின் பல உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருக்கும் வடக்கு , கிழக்கு மக்களின் பிரச்சினைகளை கையாளுவதில் எத்தகைய அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதற்கு தாங்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை சிங்கள மக்களுக்கு கூற வேண்டிய பொறுப்பும் ஜனாதிபதிக்கு இருக்கிறது.

அதிகாரப்பரவலாக்கல் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் தொடர்பில் ஆழக்காலூன்றிய எதிர்மறையான நிலைப்பாடுகளைக் கொண்ட பெரும்பான்மைச் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுத்து இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றை காண்பதற்கான சாதகமான சூழ்நிலையை தென்னிலங்கையில் உருவாக்குவதற்கு ஜனாதிபதி தன்னை அர்ப்பணிக்கவேண்டும். அதற்கான அரசியல் தகுதிநிலை அவருக்கு முழுமையாக இருக்கிறது.

முன்னைய சிங்கள தலைவர்களைப் போன்று சிங்கள கடும்போக்கு தேசியவாத சக்திகளினதும் மகாசங்கத்தின் பிரிவுகளினதும் நிர்பந்தங்களுக்கு அடிபணிந்தால் ஜனாதிபதி திசாநாயக்கவும் வரலாறு வழங்கிய அரிய வாய்ப்புக்களை தவறவிட்ட தலைவர்களின் பட்டியலில் சேர்ந்து கொள்வார் என்பது நிச்சயம்.

புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளை முன்னெடுப்பதற்கு முன்னதாக 13 வது திருத்தத்தை அவர் எவ்வாறு கையாளப் போகிறார் என்பது அவரது அரசியல் துணிச்சலுக்கு ஒரு அமிலப்பரீட்சையாக அமையும்.

இறுதியாக, கடந்தவாரம் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சென்னை 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசனுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த ஒரு கருத்து முக்கிய கவனத்துக்குரியதாகும்.

"எம்மைத் தோற்கடித்தவர்களினால் எழுதப்பட்ட எமது வரலாறு காரணமாக தவறான ஒரு எண்ணம் நிலவுகிறது. நாம் எமது பாதையை விரும்பித் தெரிவு செய்யவில்லை. எம் மீது அந்தப் பாதை திணிக்கப்பட்டது. எமது வன்முறைப் போராட்டம் அரச அடக்குமுறைக்கான எமது எதிர்வினையேயாகும். இலங்கையின் தற்போதைய அரசியல் தருணம் எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஆயுதமேந்திய பயங்கரவாதிகளாக சிலரை வருணிக்காமல் எமது கட்சியின் வரலாற்றை மாத்திரமல்ல நாட்டின் வரலாற்றையும் திருப்பி எழுதுவதற்கு வெளியைத் திறந்து விட்டிருக்கிறது" என்று சில்வா கூறியிருக்கிறார். இது தமிழர்களின் போராட்டத்துக்கும் முறுமுழுதாகப் பொருந்தும்.

# மின்சார வாகன இறக்குமதியில் நடந்த பெரும் மோசடி அம்பலம்

## தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை

கொழும்பு, நவ. 24

வெளிநாட்டு ஊழியர்களுக்காக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட உரிமங்கள் கடந்த காலங்களில் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி. சி. விக்கிரமரத்ன தெரிவித்தார்.

வெளிநாட்டு ஊழியர்கள் அனுப்பும் பணத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஆற்றிய பங்களிப்பு மகத்தானது.

இதன்படி, மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கும் முறையை கடந்த அரசாங்கம் ஆரம்பித்தது.

தகுதியான வெளிநாட்டு ஊழியர்கள் இரு சக்கர மின்சார வாகனத்தை அதிகபட்சமாக 25, 000 அமெரிக்க டொலர்களுக்கும், நான்கு சக்கர முழு மின்சார வாகனத்தை அதிக்பட்சமாக 65,000 அமெரிக்க டொலர்களுக்கும் உட்பட்டு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இதுவரை வழங்கப்பட்ட 1,000 இற்கும் மேற்பட்ட உரிமங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் நடத்திய சிறப்பு தணிக்கையில் தெரியவந்துள்ளது.

இந்தப் பின்னணியில், குறித்த உரிமங்களைப் பெறத் தகுதியுடைய ஏராளமான வெளிநாட்டு ஊழியர்கள் அந்த உரிமத்தைப் பெறவில்லை என கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும், உரிமம் வழங்கும் நடைமுறையில் பல முறைகேடுகள் நடந்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, அனைத்து முறைகேடுகளையும் உள்ளடக்கிய இந்த விசேட கணக்காய்வு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகம் பாராளுமன்றத்தில் கையளித்துள்ளார்.

இதன்படி, எதிர்காலத்தில் சபைக்கு அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் இதன் மூலம் தேசிய கணக்காய்வு அலுவலகமும் அரசாங்கத்துக்கு பல பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது.

வெளிநாட்டு ஊழியர்களுக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் கண்டறியப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் ஒரு மாதத்துக்கும் மேலாக நடத்தப்பட்ட கணக்காய்வு மூலம் இந்த அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது. (எ)

# தவறுக்கு மேல்...

(11ஆம் பக்கம் பார்க்க)

சிந்திக்கவில்லை, குற்றச்சாட்டுகள் பலவற்றுக்கு உள்ளாகியுள்ளவரின் தெரிவின் பொருத்தப்பாடு பற்றிச் சிந்திக்கவில்லை, ஆனால் மாகாண சபைக்கான முதலமைச்சர் பற்றிச் சிந்திக்க மட்டும் தவறவில்லை. தமிழரசுக்கட்சித் தலைவர்கள் தேர்தல்களைப் பற்றியும் பதவிகளைப் பற்றியுமே இப்போதும் சிந்திக்கிறார்களேயன்றித் தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள பாரிய சவால்களைப் பற்றி எள்ளளவும் மனங்கொண்டதாகத் தெரியவில்லை.

இறுதியாக, நேற்று முன்தினம் தமிழரசுக் கட்சியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தியத் தூதுவரைச் சென்று சந்தித்துள்ள விடயம். தற்போது அவசர அவசரமாக இந்தியத் தூதரை சந்திக்க வேண்டிய அவசியமென்ன? அச்சந்திப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வு, இந்தியாவின் அழுத்தம், வடக்கு கிழக்குக்கான உதவி போன்ற விடயங்களை மீள வலியுறுத்த வேண்டிய அவசியம் இப்போது ஏன் ஏற்பட்டது? புதிய அரசாங்கத்தின் தீர்வு எதுவென இன்னும் தெரியாத போது எவ்வாறு இதுபோன்ற கோரிக்கைகளை அவர்களால் முன்வைக்க முடியும். அழைக்கப்பட்டுப் போனாலென்ன அழைப்பெடுத்துப் போனாலென்ன இந்நேரத்தில் இவ்வாறான சந்திப்பையும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளையும் அவர்கள் தவிர்த்திருக்கவேண்டும். நாங்கள் ஒன்றும் இந்தியாவின் மாநிலத்தில் வாழவில்லை. அவர்கள் எமது எஜமானர்களும் அல்லர். அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும் என்பது போல தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது இறுதியில் இலங்கை அரசாங்கத்தாலும் சிங்கள மக்களாலுமே முன்வைக்கப்படவேண்டும். அதற்காக இந்திய மற்றும் சர்வதேச ஆதரவைத் திரட்டுவதில் தவறில்லை. கடந்த காலங் களில் பதவியிலிருந்த அரசாங்கங்களின் எதிர்வினைகளை வெளிப்படுத்தி இந்திய மற்றும் சர்வதேச ஆதரவைத் திரட்ட வேண்டிய தேவை இருந்தது. ஆனால் இப்போது நாட்டு மக்களின் பாரிய ஆதரவுடன் பதவியேற்றுள்ள அரசாங்கம் புதிய கொள்கை, புதிய அணுகுமுறைகளை வெளிப்படுத்தி நிற்கிறது. இதற்கு மேலாக தமிழ்க்கட்சிகளைவிட ஆளுங்கட்சிக்கே தமிழ் மக்கள் கூடிய ஆதரவைத் தெரிவித்துள்ளனர். புதிய அரசின் தலைவர்கள் தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பாகப் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர் என்பது உண்மை.

அவர்களின் தேர்தல் காலப் பேச்சுகளையோ அல்லது வழமையான சொல்லாடல்களையோ தூக்கிப் பிடிக்கவேண்டிய அவசியமில்லை. புதிய அரசியலமைப்பில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூறுவதுடன் மாகாண சபைகள், நல்லாட்சிக்கால முன்மொழிவுகள் பற்றியும் அவர்கள் பிரஸ்தாபித்துள்ளனர். உண்மையில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அவர்களிடம் இன்னும் ஓர் தெளிவான முடிவு இல்லைப் போலவே தெரிகிறது. அல்லது இப்போது தமது தீர்வை வெளிப்படுத்தி நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்த விரும்பாமலுமிருக்கலாம். ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினக்கான தீர்வு 'ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்: இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்'என்ற தமிழ், சிங்கள இனநிலைப்பாட்டைக் கொண்டது. இவ்விரு நிலைமைகளில் எதுவென்றாலும் தமிழ்த் தரப்புக்குச் சாதகமே. ஏலவே உறுதியாக ஒன்று அமைக்கப்பட்ட இடத்தில் புதிதாக ஒன்றை நிறுவுவது கடினமானது. எதுவுமே இல்லாத அல்லது உறுதியாக ஒன்றில்லாத இடத்தில் புதியதொன்றை நிறுவுவது இலகுவானது. இதனைக் கருத்திற்கொண்டு எதிர்கால அரசியலை முன்னெடுப்பதே தமிழர் தரப்பின் இப்போதைக்கான சிறந்த அணுகுமுறையாக இருக்கமுடியும். அந்தவகையில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் முதலில் சந்திந்திருக்கவேண்டியது ஜனாதிபதியேயன்றி இந்தியத் தூதுவரையல்ல. தமிழர் பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவாக அறிந்த பின் தேவைப்படின் இந்திய உதவியை நாடுவதே பொருத்தமானதாக இருக்கும். அவ்வாறு முதலில் இந்தியத் தூதுவரைச் சந்திப்பது இராஜதந்திரமான அணுகுமுறையுமல்ல. இலங்கைக்கு யார் ஜனாதிபதியாக வந்தாலும் அவர்களின் முதல் விஜயம் இந்தியாவுக்கானதாக ஏன் இருக்கிறது என்பதை இந்த இடத்தில் தமிழ்த்தரப்பு கருத்தில் எடுப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மக்கள்...

அடக்குமுறைகளும் இல்லாமல் அனுஷ்டிக்கமுடியும். அதற்கு எந்தவித மான தடையும் கிடையாது.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்கும் மக்களை ஒளிப்படங்கள் எடுக்கவேண்டாம் என்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மக்கள் சுதந்திரமான முறையில் மாவீரர் வாரத்தை அனுஷ் டிக்கமுடியும். அது அவர்களின் உரிமை. அதற்கு அரசு தடை எதுவும் போடாது- என்றார்.

(இதன் மேலதிக விவரங்களை இன்று இரவு 7 மணிக்கு டான் தொலைக்காட்சி யில் ஒளிபரப்பாகும் ஸ்பொட்லைட் நிகழ்ச்சியில் பார்க்கலாம்.) (அ)

## அடுத்த...

ஏற்பாடு செய்யப்படும். அத்துடன், இரண்டு வருடங்களுக்கு முன்னர் வழங் கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்பு மனுக்களில் சில வேட் பாளர்கள் உயிரிழந்துள்ளதுடன், சிலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன்படி புதிய வேட்புமனுக்களை அழைப்பதா இல்லையா என்பதை ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி தீர்மானிப்போம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில் நடை பெறும். திகதி கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக் கப்படவில்லை - என்றார். (அ)

## வடக்கு...

முதலீடுகளை மேற்கொள்வதற்கான பல்வேறு நகர்வுகளில் சீனா இறங்கியி ருந்தது. ஆனால், இந்தியாவின் கடுமை யான எதிர்ப்பால் இதற்கு சாத்தியமில் லாதிருந்தது.

இந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் சீனாவுடன் ஓரளவு நெருக்க மாக பணியாற்றக் கூடியது என்றும் கடந்த ஆண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கு மேற்கொண்டி ருந்த இரகசியமனான பயணத்தில் சில கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக வும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

தற்போதைய அரசாங்கத்தின் ஒத்து ழைப்புடன் வடக்கு, கிழக்கை மையப் படுத்தி சீனா முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வாக உள்ளதாகவும் அதற்கான ஆரம்பகட்ட முயற்சிகளை மேற்கொண் டுள்ளதாகவும் இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு 1.5 பில்லியன் அளவி லான நிதியை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு சீனத் தூதரகம் செலவு செய்துள்ளது. இந்த நிதியின் ஊடாக வறுமையான மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது.

பொதுத் தேர்தலில் பின்னர் கடந்த 19ஆம் 20ஆம் திகதிகளில் வடக்கு மாகா ணத்துக்குச் சென்ற இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங், 12 மில்லியன் அளவிவான உதவிகளை வழங்கியுள்ளார். அதேபோன்று கிழக்கு மாகாணத்துக்கு 8 மில்லியன் அளவி லான நிதி உதவிகளை வழங்கியுள்ளார். இவ்வாண்டு மாத்திரம் இதுவரை 1.5 பில்லியன் அளவிலான உதவிகளை சீனத் தூதரகம் வடக்கு, கிழக்கு மாகாணங்க ளுக்கு வழங்கியுள்ளது.

நன்கொடை நிகழ்வுகள் ஊடாக இங்குள்ள சமூகங்களுடன் சீனா சுமுக மான கலந்துரையாடல்களில் ஈடு பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில் கடந்த 20ஆம் திகதி யாழ்.ஊடக மையத்தில் இடம் பெற்ற ஊடகச் சந்தப்பில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய ஆதரவை சீன தூதுவர் வரவேற்றிருந் தார். சீனாவின் இந்த நகர்வுகள் எதிர் காலத்தில் அரசாங்கத்தின் ஒத்துழைப் புடன் பல்வேறு முதலீடுகளை மேற் கொள்வதற்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும் என்றும் இராஜதந்திரிகள் தெரிவித்தனர். (அ)

## நாணய...

அவசியம் என இந்த கலந்துரையாட லின்போது சர்வதேச நாணய நிதிய அதி காரிகள் குறிப்பிட்டனர்.

அதேவேளை, விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதில் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கும் அர்ப்பணிப்பு டன் கூடிய கடப்பாடு தமது நம்பிக் கையை மேலும் அதிகப்படுத்தியிருப்ப தாகவும் நாணய நிதிய அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டுள்ளமை முக்கிய விட யமாகிறது. (அ)

## நல்லூரில்...

வைக்கப்பட்டன.

மாவீரர்களின் பெற்றோர் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்பு டன் நேற்று மாலை 6 மணியளவில் கல்வெட்டுக்கள் அடங்கிய நினைவால யம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

குறித்த நினைவாலயம் நவம்பர் 27ஆம் திகதி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

1982 கார்த்திகை 27 இலிருந்து 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகி யவர்களில் விவரங்கள் பெற்றுக்கொள்ள முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கி நினைவா லயம் அமைக்கப்பட்டுள்ளது. (அ)

## இனியாவது...

தேர்தல் முடிவுகளை பார்க்கும்போது தேசிய மக்கள் சக்தி மீது மக்கள் அதிக நம்பிக்கை வைத்திருப்பதாக தெரிகிறது. வடக்கு-கிழக்கிலும் அந்த அலை பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் நிலைமை உள்ளது. மக்களின் எதிர்பார்பை இந்த அரசாங்கம் தீர்க்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கு காலம் தான் பதில் சொல்லவேண்டும்

ஜனாதிபதியின் அக்கிராசன உரை யில் தேசிய இனப் பிரச்னை தொடர் பாக பேசாமை வருத்தமளிக்கிறது.

விவசாயிகள் கடற்தொழிலாளிகள், ஏழை மக்களின் பொருளாதாரம் தொடர் பாக அவரால் சொல்லப்பட்ட கருத்தை வரவேற்கின்றேன்.அனைவரும் இலங்கை யர்கள் என்ற அடிப்படை யிலேயே அவரது செயற்பாடு இருக்கிறது.

எங்களை பொறுத்தவரை நாம் பல விலைகளை கொடுத்திருக்கிறோம். எனவே இனப்பிரச்னை விடயத்தில் அர சாங்கம் என்ன நிலைப்பாட்டில் உள்ளது என்பதை தெளிவாக கூற வேண்டும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப் படும்போது 13ஆவது திருத்தமும் இல்லாமல் செய்யப்படும் என்ற நிலை வரலாம் என கூறப்படுகின்றது.எனவே நல்ல விடயங்களை ஆதரிப்போம். மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் நிலை தொடர்ந்தால் அதனை நாம் கடுமை யாக எதிர்ப்போம்.

நாங்கள் ஒற்றுமையாக இருந்திருந் தால் இந்த ஆசனங்கள் தேசிய மக்கள் சக்திக்கு சென்றிருக்காது.

தமிழ்க் கட்சிகளுக்கு விழுந்த வாக்குகளை பார்த்தால் அது புலப்படும்.

பாராளுமன்றத்தில் தனித்தனியாக நாங்கள் செயற்பட முடியாது என்பது எனது கருத்து. பொதுவான விடயத்தில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும். அதன் மூலமே பலவிடயங் களை நாம் சாதிக்க முடியும்.

நாங்கள் ஒன்றிணைந்தால் மக்கள் எங்களோடு நிற்பார்கள் என்பதை தேர்தல் மூலம் சொல்லியிருக்கிறார்கள். யாழில் டக்ளஸ் மற்றும் அங்கஜன் ஆகியோரது வாக்குகளே தேசியமக்கள் சக்திக்கு சென்றுள்ளது. தேசியத்தை நேசிக்கின்ற மக்களின் வாக்குகள் அவர்களுக்கு செல்லவில்லை.

எனவே இனிவரும் காலங்களிலும் நாங்கள் ஒன்றிணையவில்லை என்றால் வடக்கு-கிழக்கில் அரசாங்கம் ஆளும் சந்தர்ப்பத்தை உருவாக்கிய தவறை நாங் கள் விட்டவர்களாக இருக்கப் போகி றோம் - என்றார். (அ)

# 8 லீற்றர் கசிப்புடன் யாழில் மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் சுமார் 8 லீற்றர் கசிப்புடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய் வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடு பட்ட மூவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.



உரும்பிராய் தெற்கு செல்வபுரம் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் மூவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர் களை நீதிமன்றத்தில் முற்படுத்துவ தற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

## யாழில்...

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அத்தி யட்சர் எம்.எஸ்.ஜரூல் வழிகாட்டலில் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சமன் பிறேமதிலக தலைமையிலான குழுவினர், கிளி நொச்சியில் பதுங்கியிருந்த ஒருவரையும், குறித்த வீட்டில் பணியாற்றிய பணிப் பெண்ணையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

சட்டத்தரணி இல்லாத நேரம் தொடர்பாக பிரதான சந்தேக நபருக்கு வீட்டுப் பணிப்பெண் வழங்கிய தகவ லுக்கமைய குறித்த திருட்டு இடம்பெற்ற தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கைதான சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன் றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவ டிக்கை எடுத்துள்ளனர். (அ)

## அர்ச்சுனா...

சமூக ஊடகங்களில் பல்வேறு காணொளி களைப் பதிவிட்டிருந்தார், அவற்றில் சில காணொளிகள் தற்போது பெரும் சர்ச் சையை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறான பின்னணியில், அவருக்கு எதிராக சுவர்ணபூமி தேசிய இயக்கம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

வைத்தியர் ராமநாதன் அர்ச்சுனா பிரிவினைவாதக் கருத்துக்களை முன் வைத்து வருவதாக சுவர்ணபூமி தேசிய இயக்கத்தின் தலைவர் அசங்க ருவன் பொதுப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அவரை பாராளுமன்ற உறுப் பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் கள் அனைவரும் அவநம்பிக்கை பிரே ரணை கொண்டு வர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், சமூக செயற்பாட்டா ளர்களான பாலித்த லக்ஷ்மன், சிவில் சமூக செயற்பாட்டாளர் குணரத்ன அதிகாரி மற்றும் சமூக செயற்பாட்டா ளர் நாமல் குமார உள்ளிட்டோரும் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, பாராளுமன்ற சம்பிர தாயத்திற்கு ஏற்ற வகையில் உறுப்பினர் கள் நடந்து கொள்ள வேண்டும் என கபே எனப்படும் நீதியானதும் சுதந்திர மானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்று பணிப்பாளர் [illegible] தெரிவித்துள்ளார். (அ)

## நானும்...

நாங்கள் தெரிவித்துள்ளோம். திஸா நாயக்க முன்னோக்கி செயற்படவேண் டும் இதனை நடைமுறைப்படுத்த வேண் டும் என நான் கருதுகின்றேன் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## நெல்...

உட்பட உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு அரிசி வகைக ளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது.

அதிக கேள்வியுள்ள நாடு அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அரிசி தட்டுப்பாட்டுக்கு தற்காலி தீர்வை வழங்கும் நோக்கில் 70 ஆயிரம் மெற்றிக் தொன் நாடு அரிசியை இந்தி யாவிலிருந்து இறக்குமதி செய்ய அர சாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த அரிசியை எதிர்வரும் டிசெம் பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்ய உள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கொழும் பில் நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த -

பண்டிகை காலத்தில் நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களை தீர்க்கும் வகையில் இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் விவசாய அமைச்சு ஒன்றிணைந்து கூட்டு அமைச்சரவைப் பத்திரமொன்றை இதற்காக சமர்ப்பித் துள்ளது. விவசாயிகளுக்கும் பிரச்னை ஏற்படாத வண்ணம் இந்தப் பிரச்சி னைக்கு தீர்வு காணப்படும்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் நுகர்வோருக்கும், விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் தீர்மானங் களை எடுத்து வருவதுடன், இடைநிலை தரகர்களுக்கு கொள்ளையடிக்க நாம் அனுமதியளிக்கமாட்டோம்.

பாரிய நெல் ஆலையாளர்களுடன் எமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. ஆனால், நாட்டில் தேவைக்கு மேலதிக மாக நெல் உற்பத்தி இடம்பெற்றுள்ளது. அவ்வாறெனின் அவர்களிடம்தான் சந்தைக்கு விநியோகிக்கப்படாத நெல் இருக்க வேண்டும்.

அதனால் அரிசியை தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதுடன், தற்போதுள்ள கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனையும் செய்யப்படும்.

நுகர்வோர் இவ்வாறு பாதிப்புகளை எதிர்கொள்ள பிரதான காரணம் விவ சாய திணைக்களம் நெல் கொள்வனவு களை மேற்கொண்டிருக்காமைதான். அவ்வாறு கொள்வனவு செய்திருந்தால் உரிய வகையில் அவற்றை சந்தைக்கு விநியோகித்து சந்தையில் போட்டியித் தன்மையை உருவாக்க முடிந்திருக்கும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மழையுடனான காலநிலை; யாழில் 7,010 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாண ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக காரணமாக 1901 குடும்பங்களைச் சேர்ந்த 7010 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 27 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலக பிரிவில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2335 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவில் 470 குடும்பங்களைச் சேர்ந்த 1520 பேரும்,

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 265 குடும்பங்களைச் சேர்ந்த 928 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலக பிரிவில் 215 குடும்பங்களைச் சேர்ந்த 901 பேரும்,

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 171 குடும்பங்களைச் சேர்ந்த 599 பேரும், காரைநகர் பிரதேச செயலக பிரிவில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேரும் பாதிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 73 பேரும், நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ)

## புரட்சிகரமான மாற்றத்தை புரிந்துள்ள வடக்கு மக்கள்!

### நிச்சயம் தலைவணங்கியாகவேண்டும் என்கிறார் ஜே.வி.பியின் ரில்வின் சில்வா



கொழும்பு, நவ. 24

**வடக்கு மக்கள் புரட்சிகரமான மாற்றத்தை செய்துள்ளனர். அதற்கு நிச்சயம் தலைவணங்கியாக வேண்டும். தமிழ் மக்களுக்கெ பிரத்தியேகமான பிரச்னைகள் உள்ளன. அவை தீர்க்கப்படும் - என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன். வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் இதுவரைகாலமும் அரசியல் முகவர்கள் ஊடாகவே தேர்தல் காலத்தில் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

பிரதான கட்சிகள் வடக்கிலோ, மலையகத்திலோ போட்டியிடமாட்டா. அங்குள்ள கட்சியொன்றின் ஊடாக பேரம் பேசல் இடம்பெறும். அந்த அரசியல் முகவர்களும் மக்கள் பிரச்சினையை விற்று, பதவிகளை பெற்றுவந்தனர்.

இந்நிலைமையை நாம் மாற்றினோம். ஒரு கட்சியாக அனைத்து இடங்களிலும் போட்டியிட்டோம். எல்லாம் புதியவர்கள். வடக்கு மக்களும் எமக்கு பேராதரவு வழங்கினர். மலையகத்திலும் ஆதரவு கிட்டியது. யாழ்.(வடக்கு) மக்கள் எடுத்த தீர்மானத்துக்கு கட்டாயம் தலை வணங்கி மரியாதை செலுத்த வேண்டும். அது புரட்சிகரமான தீர்மானமாகும்.

முழு நாடும் ஒரு கட்சியின் கீழ் திரண்டுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது. ஒரு நாட்டுக்குள் வாழ்வதற்கு மக்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர். வடக்க, கிழக்கு மக்களுக்கென குறிப்பாக பல பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்படும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் - என்றார். (அ)

## உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பம்!

கொழும்பு, நவ. 24

பரீட்சையை ஒத்திவைக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்து வரும் நிலையில், 2024 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நாளை ஆரம்பமாகும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பரீட்சையை ஒத்திவைக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.எனினும், உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான முன்னோடி ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. கடந்த மார்ச்சில் இதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்ததாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் பரீட்சை நடைபெறும் திகதிகளுக்கு அமைய, அடுத்துவரும் கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை உள்ளிட்ட பல பரீட்சைகளுக்கான திகதிகள், ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்பட்டால், ஏனைய பரீட்சைகளுக்கான திட்டமிடல் முற்றிலும் ஒழுங்கற்றதாக மாறிவிடும் என்றும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## 53ஆண்டுகளின் பின்னர் ஜே.வி.பி. கொள்கை மாற்றியமை மகிழ்ச்சி!

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 24

இனவாத அரசியலுக்கு இனி இடமளிக்கப் போவதில்லை என்று கூறும் மக்கள் விடுதலை முன்னணி 1971இல் மாகாணசபை முறைமையூடாக வடக்கு , கிழக்கிற்கு அதிகாரத்தை வழங்குவதற்கு எதிர்ப்பினை வெளியிட்டது. எவ்வாறிருப்பினும் 53 ஆண்டுகளின் பின்னர் தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டு இனவாத அரசியலுக்கு இடமில்லை என நிலைப்பாடுக்கு வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



நாடு வங்குரோத்தடைந்தமைக்கு ஜே.வி.பி.யும் பொறுப்பு கூறவேண்டும். தற்போது கொள்ளைகளை மாற்றிக் கொண்டு வேறு திசையில் பயணிக்கின்றனர். எவ்வாறிருப்பினும் பல ஆண்டுகளின் பின்னராவது இவர்கள் கொள்கைகளை மாற்றிக் கொண்டமை மகிழ்ச்சிக்குரியது.

ஆனாலும் தற்போதைய ஜனாதிபதியிடம் புதிய வேலைத்திட்டங்களை நாம் பார்க்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துச் செல்கின்றனர். 24 மணித்தியாலங்களில் செய்து காட்டுவதாக முன்னர் கூறிய விடயங்களுக்கு தற்போது 6 மாதங்கள் கேட்கின்றார். அது சரியா?

ஒரு அரிசியைக்கூட இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது எனக் கூறியவர்கள் தற்போது, முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். மக்களை பசியால் வாட விடக் கூடாது என்பதற்காக அரிசியை இறக்குமதி செய்கின்றனர் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் தேர்தலின் போது வாக்குறுதிகளை வழங்க முன்னர் அவர்கள் இந்த யதார்த்தத்தை உணர்ந்திருக்க வேண்டும் - என்றார். (அ)

## ரணிலை பணயக் கைதியாக பயன்படுத்தச் சிலர் முயற்சி!

### ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 24

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு சிலர் பணயக் கைதியாக பயன்படுத்துவதற்கு முற்படுகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தேசிய பட்டியல் சர்ச்சை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

சிலிண்டர் அணிக்கு கிடைக்கப்பெறும் தேசிய பட்டியலில் புதிய ஜனநாயக முன்னணிக்கு ஒரு ஆசனம் கிடைக்கப்பெற வேண்டும் என புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது. நான்கு கட்சிகள் இதில் கைச்சாத்திட்டுள்ளன.

அந்த அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு ஆசனம்கூட கிடைக்கப்பெறாததால், புதிய ஜனநாயக முன்னணி எனக்கு அந்த வாய்ப்பை வழங்கியுள்ளது. ஐ.தே.கவில் உள்ள 99 சதவீதமானோர் இதை விரும்புகின்றனர். ஒரு சிலர் மட்டும் எதிர்க்கின்றனர். நான் திருட்டுதனமாக நாடாளுமன்றம் செல்லவில்லை-என்றார். (அ)

## நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சஜித் பிரேமதாஸவுடன் சந்திப்பு!

கொழும்பு, நவ. 24

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் தொடர்பில் இதன்போது கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாக எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது மக்கள் ஆணையால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் ஜனாதிபதியும் இருப்பதால், முன்னாள் அரசாங்கம் கையெழுத்திட்ட சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தை மாற்றியமைத்து, மக்கள்சார் உடன்பாட்டை எட்டுவதற்குக் கவனம் செலுத்த வேண்டும் என இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பில், சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் உயர் மட்டக் குழுவின் பிரதானி பீற்றர் ப்ரூவர், துணைப் பிரதானி, வதிவிடப் பிரதிநிதி திருமதி மார்த்தா வோல்டெமிகல் மற்றும் வபதிவிடப் பொருளாதார நிபுணர் மானவி அபேவிக்ரம ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (அ)

## காங்கேசன்துறை வந்த ரயிலில் மோதுண்டு 2 வயது குழந்தை பலி!

கொழும்பு, நவ. 24

வளர்ப்பு நாயை பின்தொடர்ந்து ஓடிய 2 வயது 2 மாத ஆண் குழந்தையொன்று கல்கமுவ பிரதேசத்தில் கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற விரைவு ரயிலில் மோதி நேற்று முன் தினம் காலை தாய் முன்னிலையில் உயிரிழந்துள்ளது.

கல்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்ருவகந்த பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் இளைய பிள்ளையான எம்.செஜன் ஹசரங்க என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்த வீட்டில் இருந்து சுமார் 15 மீற்றர் தொலைவில் வடக்கு ரயில் பாதை அமைந்துள்ளதால், குழந்தை வெளியில் செல்லாதவாறு வீட்டின் நுழைவாயிலுக்கு அருகில் வேலி அமைக்கப்பட்டிருந்தபோதும் குழந்தை அதனை கவிழ்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாய் குழந்தையுடன் கடைக்குச் செல்ல தயாராகி கொண்டிருந்த போது, கவர் கீழே விழும் சத்தம் கேட்டது. குழந்தை ரயில் தண்டவாளத்தை நோக்கிச் செல்வதைக் கண்ட தாயார், ஓடிச்சென்று அதனை காப்பாற்ற முயன்றாலும் வேகமாக வந்த எக்ஸ்பிரஸ் ரயில் குழந்தை மீது மோதியது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org